ஆசிரியர் நினைவுமலர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-சச.] சருவஜித்துஸு ஆவணி-புரட்டாசிமீ [பகுதி-கo, கக.
Vol. 44. August—October, 1947. No. 10, 11.

உள்ளுறை.

ஆசிரியர்பிரிவு:—உதவிப்பத்திராசிரியர் கரு௩—கசo
அநுதாபக்குறிப்புக்கள்:— கசக—கசச
இரங்கற்பாக்கள்:—புலவர்கள் கசடு—களசு
மஹாவித்வான் மறைவு:— ஸ்ரீமத். ப. ரெ. திருமலையங்காரவர்கள் களஎ
சுவாமி விபுலாநந்தர் மறைவு:— பத்திராசிரியர் களஅ
ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள் களக
மதிப்புரை:— கஅo

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1947.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and
Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press,
No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணன்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும் ...	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன் ...	4	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் ...	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா ...	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை ...	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ண சரித்திரவிமர்சம் ...	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ...	0	4	0

ஆரியமும் செந்தமிழும் ஆன்ற இருமுந்நீர்
வாரிப் பருகி வழங்குமுகில்—சீரியர்தம்
சிந்தை பிரியாத் திருநாரண னென்னும்
எந்தை யெழிலுருவம் இஃது.

செந்தமிழ்.

தொகுதி-௪௪.] ஸருவஜித்துஷு ஆவணி-புரட்டாசிமீ [பகுதி-௧௦, ௧௧.
Vol. 44. August—October 1947. No. 10, 11.

ஆசிரியர் பிரிவு

இச்செந்தமிழ்ப்பத்திரிகையின் ஆசிரியரும் தமிழ்ச்சங்கக்கலா சாலைத் தலைமையாசிரியருமாயமர்ந்து தலைசிறந்த தமிழ்ப்பணியாற்றி வந்த திரு. நாராயணையங்கார்ஸ்வாமி நிகழும் ஸருவஜித்துஷு ஆடிமீ ௧௩உ (29—7—47) செவ்வாய்க்கிழமை செந்தமிழ்நாடு நொந்து நைந்திரங்க அந்தமில்திருநாடகமகிழ்ந்தெதிர்கொளச் சென்று, தேவர்தேவன் திருமகள்நாயகன் மூவர்முதல்வன் முளரிநாண் மலர்ச் சேவடிப்பணிசெய் சீரியர்குழுவின் மேவியசெய்தி தமிழ் மக்கட்கெல்லாம் ஆறுத்துயர்விளைப்பதாகும்.

இவர், பாண்டிநாட்டுள் பெரியாழ்வாரும் அவர் திருமகளா ரான ஆண்டாளும் அவதரித்துச் செஞ்சொன்மாலைகளால் திரு மகள்கேள்வனுக்கு உவப்பினையும் உலகத்துயிர்களுக்கு உய்தியை யும் விளைவித்த பெருமைவாய்ந்த ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தென் கிழக்கே பத்துநாழிகைவழிபெல்லையில் 'நன்மையால்மிக்க நான் மறையாளர்' வாழ் தொன்மைவாய்ந்த தொகுபுகழாலொளிர் எதிர்க் கோட்டையென்னும் சிற்றூரில், பாரத்வாஜகோத்திரமும் ஆபஸ் தம்பஸூத்திரமும் உடையராய்த் தென்கலையும் வடகலையும் திகழ்ந்த நாவினராய் விளங்கும் திருமாளிகையார்குடியில் ஞானநுட்டானங் களிற்சிறந்து அக்குலகிரியாகவிளங்கிய அப்பனையங்கார் என்ற திரு நாமமுடைய அந்தணசிரேட்டர்க்கு அவர்தம் பொற்புமிகுசிறப்பிற் கற்புடைத்திருவாகிய சேங்கமலவல்லியம்மையார்பால் ஆண்மக்கள் நால்வரும் பெண்மக்கள் ஐவருமாக நவமணியெனப்பிறந்த மக்களில் இரண்டாம்புதல்வராவர். இவர்பிறப்பாற் சிறப்பெய்திய நன்னாள், கொல்லம்ஆண்டு 1036ல் நிகழ்ந்த துன்மதிஷு ஐப்பசிமீ 17உ (31—10—1861) அத்தநக்ஷத்திரத்தொடுகூடிய வியாழக்கிழமை என்ப.

இவர் தந்தையாரால் சாதகருமம் முதலிய சடங்குகளும் வித்தியாப்பியாசமும் அவ்வப்பருவத்தே முறைப்படிசெய்வித்து வளர்க்கப்பெற்று ஓரளவு வடமொழி தென்மொழி யறிவுவாய்ந்து, மேலும் கலைக்கடல் பருகவிழைந்து, தம்மூரில் அதற்கேற்றவாய்ப் பின்மையால், அக்காலத்துச் செந்தமிழ்ச்செல்வச் சேதுநாட்டின் தலைநகராய்த் தமிழ்மடந்தையின் முகம்போலச் சிறந்துவிளங்குத லின் முகவையென்று பெயர்வாய்ந்ததாய் உள்ள இராமநாதபுரத் தில் மழைவள்ளல் பாஸ்கரஸேதுபதி மன்னரும், ஸேதுஸமஸ்தான நிருவாக அதிகாரியாகவிளங்கிய ராஜாராமராயரும், பாண்டித் துரைத்தேவரும் கோட்டைஸாமித்தேவரும் ஆகிய பெருமக்க ளாதரவில் வடமொழியிலுள்ள காவியாலங்கார நாடக தர்க்க வியாக ரண வேதாந்த சோதிட மருத்துவநூல் நிபுணர்களும், முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமப்புலவர்களும், பிறகலைத்துறைத் தேர்ச்சியுடையாரும், அவ்வச்சமயநூல்வல்லாரும் ஒருங்கு இக விலர்குழீஇ அவ்வக்கலைத்துறைகளைப் பொருந்துமாற்மூன் வளர்த்து வருவதறிந்து, அதுவே தாம் பல கலைத்துறைகளிலும் தேர்ச்சி யடைதற்குத் தக்க இடமென்று துணிந்து, அங்குற்றுச் சேது ஸமஸ்தானப் புலவர்திலகராய்நிலவிய ஸதாவதானம் முத்துஸ்வாமி ஐயங்கார்ஸ்வாமியிடம் தமிழிலக்கிய இலக்கணங்களும், ராஜாராம ராயர் நன்முயற்சியால் ஸேதுஸமஸ்தானப் பொருளுதவிபெற்று முகவையில் நடைபெற்ற வடமொழிக்கல்லூரியில் பேராசிரியராய்த் திகழ்ந்த பந்தல்குடி ஸ்ரீ. உப. வே. வித்வான் வேங்கடாசாரியர்ஸ்வாமி யிடம் வடமொழி வியாகரணம் முதலியவையும், பாற்கரஸேதுபதி மகாராஜரவர்கள் பாண்டித்துரைத்தேவரவர்கள் முதலியோர் வேண்டுகோட்கிசைந்து முகவையில் எழுந்தருளியிருந்த சித்தாத்திக் காடு ஸ்ரீ. உப. வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசாரியர்ஸ்வாமியிடம் ஸ்ரீபாஷ்யம் பகவத்விஷயம் முதலிய வைணவசமயநூல்களும் நன்குகற்றுத் தேர்ந்து சிறந்த புலமையடைந்தார். வடமொழி பயிலுங்கால் இவருடன் ஒருசாலைமாணவராயிருந்தோர் எட்டய புரம் ஸமஸ்தானவித்துவான் திரு. வீ. சாமியையங்கார்ஸ்வாமி முதலியோராவர்.

ஆசிரியர், வடமொழி தென்மொழி யிலக்கிய இலக்கணநூற் புலமையோடு பலசமயநூற்புலமையும் மந்திரம் மருத்துவம் சோதிடம் தருக்கம் முதலிய பிறகலைத்தேர்ச்சியும் ஒருங்கு

திறம்படப்பெற்று 'இவர் கல்லாதகலையில்லை' யென்று சொல்லலாம் படி விளங்குதற்குக் காரணம், பலகலைத்துறைகளிலும்வல்ல புலவர்கூட்டம் இடையறாதுநிகழ்ந்த சேதுஸமஸ்தான முகவைநகர் வாசமே எனின் அது மிகையாகாது.

இவர்தம் மதிநுட்பமும் இருமொழிப்புலமையும் பலகலையறிவும் ஒழுக்கமும் அடக்கம் முதலிய உயர்குணங்களும் கண்ட புலவர்களும் ஸேதுவேந்தரும் ஸேதுஸமஸ்தான நிர்வாகிகளும் இவரை நன்குமதிப்பாராயினர். தமிழ்வள்ளலான பாலவநத்தம்ஜமீந்தார் பொன். பாண்டித்துரைத்தேவரவர்கள் இவரைத் தம் ஆஸ்தான வித்வானாக உவந்தேற்றுக்கொண்டார். கலைத்துறைமுற்றிய ஆசிரியர், அருங்கலைவிநோதரும் பெருங்கொடைவள்ளலுமாகிய பாண்டித்துரைத்தேவராதரவுபெற்றதில் வியப்பென்னை? ஆசிரியரனைய பெரும்புலவர்குழுவே பாண்டித்துரைத்தேவருள்ளத்துப் பண்டைத்தண்டமிழ்ச்சங்கநிகழ்ச்சிகளையெழுப்பி, அவர் மதுரையில் இற்றைஞான்று விளங்கும் நான்காஞ்சங்கத்தை நிறுவுதற்கும் மூலமாய்நின்றது

துரையவர்கள் ஆதரவுபெற்ற ஆசிரியர், ஒருநாள் அவரோடு உரையாடிக்கொண்டிருக்கும்பொழுது ஒருவடமொழிப்புலவர், துரையவர்களிடம்,

கஜபுஜங்கவிஹங்கமபந்தனம் ஶஶிதிவாகரயோர் க்ரஹபீடனம் ।
மதிமதாம் ச விலோக்ய தரித்ரதாம் விதிரஹோ பலவாநிதி மே மதி: ॥

என்னும் சுலோகத்தைக் கூறி அதன்கண் அமைந்த நயங்களை விளக்கக்கேட்ட ஆசிரியர், அச்சுலோகத்தமைந்த பொருளும் நயங்களும் மேலும் சிறந்தமையும்படி, உடனே—

வெங்களிறு போங்கரவு மீப்பறவை யாப்புறலும்
செங்கதிர்வெண் டிங்களராத் தீண்டுதலும்—தங்குபுகழ்
மிக்க வறிஞர் மிக்வறிஞ ராதலுங்காண்
தக்க விதிவலிக்கட் சான்று.

என ஒரு வெண்பாவை விரைந்தியற்றிக் கூறினர். அதுகேட்ட துரையவர்கள், அவ்வெண்பாவின் அமைதியையும் ஆசிரியருடைய வடமொழி தென்மொழிப்புலமையினையும் மொழிபெயர்க்குமாற்றலையும் கவித்துவத்தையும் வியந்து, வடமொழியிற்சிறந்த சோதிட

நூலாக விளங்கும் ஜாதகசந்திரிகையை இனிய தமிழ்வெண்பாயாப்பின் மொழிபெயர்த்துதவுமாறுவேண்ட, ஆசிரியர் அவ்வாறே மொழிபெயர்த்துதவினர். அந்நூலின் அருமைபெருமைகளை நன்கறிந்த துரையவர்கள் அதனைப் பெரும்புலவரவைக்களத்தில் அரங்கேற்றுவித்து ஆசிரியரைப் பெரிதும் பாராட்டியதன்மேலும் அந்நூலை யாவரும் எளிதிற்பெற்றுப் பயிலுமாறு அச்சிட்டும் வெளியிடுவித்தனர்.

இவ்வாறு முகவையில் துரையவர்களாதரவும் அவர் ஸஹோதரர் கோட்டைசாமித்தேவரவர்களாதரவும்பெற்றுத்தங்கிப் பன்னூற்றிரட்டைத் தொகுத்தற்கும் பதிக்தற்கும் துரையவர்களுக்கு உதவிபுரிந்துவந்த ஆசிரியர், பின் துரையவர்கள் மதுரையில் 24-5-1901ல் தமிழ்ச்சங்கம் நிறுவியகாலத்தில் அவர்களால் சங்கக் கல்லூரியின் தலைமையாசிரியராக நியமிக்கப்பெற்றுத் தம் இறுதி நாள்வரை (சற்றேறத்தாழ நாற்பத்தாறு ஆண்டுகள்) அப்பதவியைத் திறம்பட நிர்வகித்துப் பல நூறுமாணவர்க்குத் திருக்குறள் இராமாவதாரம் சங்கநூல்கள் தொல்காப்பியம் முதலான உயர்ந்த தமிழிலக்கிய இலக்கணநூல்களைச் சிறந்தமுறையிற் கற்பித்துவந்தனர். இவர்பாற்பயின்ற மாணவர்கள், நிரம்பிய புலமையடைந்து சங்கப்பரீக்ஷைகளிலும் சென்னைப் பல்கலைக்கழகத்துத் தனித்தமிழ்வித்துவான்பரீக்ஷையிலும் முதற்றரத்திற்றேறிப் பட்டமும் பரிசும் பாராட்டும் பெற்றுத் தமிழகமுழுதும் உள்ள ஆங்கிலக் கல்லூரிகள் உயர்நிலைப்பள்ளிகள் பல்கலைக்கழகங்கள் புலவர்கல்லூரிகள் முதலியவற்றில் ஆசிரியர்களாகவும் ஆராய்ச்சியாளராகவும் இருந்து சீரிய தமிழ்த்தொண்டாற்றிப் பிரசித்திபெற்றுவிளங்குதல் தமிழுலகம் அறிந்ததொன்று.

ஆசிரியர், இவ்வாறு தமிழ்ப்புலவர் பலரைத்தோற்றுவிக்கும் பணியுடன், துரையவர்கள் கட்டளைப்படி இடையே சில ஆண்டுகள் சங்கமானேஜராயிருந்து சங்கப்பணிகளை உரியகாலத்தில் இனிது நிறைவேற்றிப்போந்ததுமன்றி, 1910ஆம் ஆண்டுமுதல் இச்செந்தமிழ்ப்பத்திரிகையின் ஆசிரியர்பணியையும் மேற்கொண்டு 36 ஆண்டுகள் அதனையும் செவ்விதின் நடத்திவந்துள்ளனர். பாலொடு தேன்கலந்தாற்போன்று வடமொழிப்புலமையொடுகூடிய தென்மொழிப்புலமைவாய்ந்த ஆசிரியர் செந்தமிழில் எழுதி வெளியிட்ட

பொருளுரைகள் தமிழ்மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாதன என்பது, நடுநிலைதிறம்பா நாவீறுடையரான சுன்னாகம் அ. குமார சுவாமிப்புலவர் கட்டுரை * முதலியவற்றால் விளங்கும்.

ஆசிரியர் செந்தமிழில் தமிழியல்பும் இலக்கணமும் இலக்கிய மும் தருக்கமும் சோதிடமும் பழையவரலாறும் சமயக்கொள்கை களும் பிறவும் பற்றிப் பெரியனவும் சிறியனவுமாக வரைந்து வெளி யிட்ட ஆராய்ச்சிமுறையும் வாதமுறையும் பயின்றகட்டுரைகள் ஐம்பதின்மேலும் உள. அவை என்றும் நின்று பயன்விளைக்கும் நீர்மையன; இனியநடையில் எளிதிற் பொருள்விளக்குமியல்பின. அவற்றுள், வாதமுறைபயின்ற கட்டுரைகளால் ஆசிரியருடைய பலகலைத்தேர்ச்சியும், நடுநிலைபிறழாத வாதநேர்மையும், உண்மை யினை யார்க்கும் அஞ்சாது எடுத்துரைக்கும் மனவலிமையும், பிழை படாத நுண்ணறிவின்பெற்றியும், வெற்றிதோல்விகளைப் பொருட் படுத்தாது உண்மைகாணமுயலும் உயர்வும், வாதவிஷயத்தை விட்டு எதிரியை வசைபுகலாத மாண்பும் முதலிய உயர்குணங்கள் பலவும் புலனாகும்.

இவ்வாறு அரும்பெறற்பொருளுரைகளான்மட்டுமன்றிச் செந் தமிழில் அநுபந்தமாகத் தாம் ஆராய்ந்து பதித்து வெளியிடுவித்த பல நூற்பதிப்புக்களாலும் ஆசிரியர் செந்தமிழை வளப்படுத்தினர். அப்பதிப்புக்களுள் அநுமானவிளக்கமும் பாண்டியமும் மாறனலங் காரமும் பழமொழி முதலிருநூறும் அண்டகோளவிருத்தியும் அமிருதாஞ்சனியும் தலைசிறந்தன. இவற்றுள் அநுமானவிளக்கம், 'மணிமேகலை நூலுட்பங்கொள்வதெங்ஙன்' என்று பாராட்டப் பட்ட சாத்தனார்நூலுள் 29வது தவத்திறம் பூண்டுதருமங்கேட்ட காதையின் விளக்கவுரையாயெழுந்தது. பாண்டியம் என்பது தமிழ்ச் சுருக்கெழுத்துமுறையாகும். மாறனலங்காரம் சிறந்த தோர் அணியிலக்கணநூலாகும். பழமொழி பதினெண்கீழ்க் கணக்கினுள் ஒன்று. அநுமானவிளக்கம் பழமொழிக்குறிப்புரை அண்டகோளவிருத்தி அமிருதாஞ்சனியுரை முதலியவை ஆசிரியர்

* செந்தமிழ் கக-ஆம் தொகுதியில் பக்கம்-அ0, கஅ-ஆம் தொகுதியில் பக்கம் சஙக, ககூ-ஆம் தொகுதியில் பக்கம் ஙசூச, உ0-ஆம் தொகுதியில் பக்கம் ஙங, ௫உ பார்க்க.

கவிகருத்தறிந்துரைக்கும் சிறந்த உரையாசிரியரென்பதை நன்கு புலப்படுத்தும். இவையேயன்றி ஆசிரியர் அவ்வப்போதியற்றிய தனிப்பாடல்கள் பலவும் எழுதிய கட்டுரைகள் சிலவும் உண்டு.

இங்ஙனம் சீரிய நூலாசிரியர் உரையாசிரியர் போதகாசிரியர் பத்திராசிரியர் பதிப்பாசிரியர் என்று பாராட்டநின்ற ஆசிரியரை 1922-ஆம் ஆண்டு ஜனவரிமீ 13உ மேன்மைதங்கிய வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு விஜயம்செய்தகாலத்துச் சென்னையரசாங்கம் இளவரசர்கரத்தால் ஜோடிசால்வையும் சிங்கமுகத்தோடாவும் பதக்கமும் பரிசளிக்கச்செய்து கௌரவித்தது. மதுரைத்தமிழ்ச் சங்கத்தார் பவஞு ஆடிமீ ஙகஉ நிகழ்ந்த சங்கத்தின் ஙங-ஆம் வருடவிழாவில் தலைவரான சென்னைமாகாணகவர்னர் கனம் பொருந்திய ஸர் முஹம்மது உஸ்மான் ஸாஹிப்பஹதூர் அவர்கள் கரத்தால் ஆயிரத்தைந்நூறுரூபா அடங்கிய பொன்முடிப்பும் சால்வையும் அளித்துச் சிறப்பித்தனர். இம்மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் அக்கிராஸநரும் ஸேதுவேநதர்பெருமானும் ஆன மாட்சிமைதங்கிய ஷண்முகராஜேசுவரநாகநாதஸேதுபதியவர்கள் தம் முப்பத்தேழாம் ஆண்டுநிறைவுவிழாவில் பொற்பதக்கமும் பட்டும் பரிசு நல்கிப் பாராட்டினார்கள். பாலையம்பட்டி ஜமீந்தாரும் துரையவர்களுடையஸஹோதரர் கோட்டைஸாமித்தேவர்குமாரருமாகிய மாண்புமிக்க இராமசந்திரதேவரவர்கள் ஒருமுறை ஜோடிசால்வையும் இருநூறுரூபாவும் பரிசளித்துச் சிறப்பித்தனர். தமிழ்நாட்டிலுள்ள செல்வருள்ளே சிலரும் மடாதிபதிகளிற் பலரும் போர்வையும் பட்டும் பொன்னும்பொருளும் பரிசில்நல்கியதும் உண்டு. தமிழ் நாட்டு வித்தகச்செல்வருள் தஞ்சை வக்கீல் K. S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள் ஆசிரியர் தகுதியை உள்ளபடி உணர்ந்து பாராட்டியவரென்பது ஆசிரியர்க்கு அவரெழுதிய கடிதங்களால் அறியக்கிடக்கின்றது.

ஆசிரியர் விரும்பியிருந்தால் பிறகலைக்கழகப்பணிமேற்கொண்டு நிறைந்த ஊதியம்பெற்று மிக்கபிரசித்தியும் அடைந்திருக்கலாம். துரையவர்களிடத்தும் அவர்கள் நிறுவிய சங்கத்தினிடத்தும் அவர்க்குள்ள பேரபிமானமும், ஆடம்பரத்தில் வெறுப்பும், பொருட்பற்றற்ற மனநிலையுமே அவர்வாழ்நாள்முழுதும் சங்கப்பணியிற் கழிதற்குக் காரணமாகும்.

மதுரைத்தமிழ்ச்சங்கம் ஆசிரியரை அச்சங்கப்புலவர்தலைவ ராகவும் வித்யாவிஷய ஆலோசனைக்கழக உறுப்பினராகவும் தனித் தமிழ்ப்பரீக்ஷைகளுக்குப் பரீக்ஷகராகவும் பெற்றுச் சிறப்புற் றது. சென்னைப்பல்கலைக்கழகமும் யாழ்ப்பாணத்து ஆரிய திராவிடபாஷாபிவிருத்திசங்கமும் அண்ணாமலைபல்கலைக்கழகமும் பலஆண்டுகள் தத்தம் தமிழ்வித்வான் பரீக்ஷைகளுக்கு ஆசிரியரைப் பரீக்ஷகராகத் தெரிந்தெடுத்துக் கௌரவித்துச் சிறப்புற்றன.

ஆசிரியர்க்குப் பெண்மக்கள் நால்வரும் அறிவொழுக்கங்களாற் சிறந்த புதல்வர் ஒருவரும் உளர்.

ஆசிரியர் அவதரித்த ஊர் புலவர்கள் நிறைந்தது. அதினும் ஆசிரியர் குடும்பம் ஆசிரியருடைய நன்முயற்சியால் புலவர்பலரை யுடையதாய் விளங்குகின்றது. (1) மதுரையிலுள்ள இராமேசுவர தேவஸ்தானபாடசாலையில் தலைமைத்தமிழாசிரியராயுள்ள T. N. அப்பனையங்காரவர்கள் ஆசிரியருடைய அருமைக்குமாரராவர்; (2) இதுவரை செந்தமிழ் உதவிப்பத்திராசிரியராயிருந்து ஆசிரிய ருக்குப்பின் தமிழ்ச்சங்கக்கலாசாலைத்தலைமையாசிரியராகவும் செந் தமிழ்ப்பத்திராசிரியராகவும் இருக்கும் திரு. கி. இராமாநுஜையங் கார் ஆசிரியருடைய தம்பிகுமாரராவர்; (3) சென்னைப் பல்கலைக்கழ கத்து வித்வான்பரீக்ஷைகளிலும் சங்கத்துப் பண்டிதபரீக்ஷையிலும் தேர்ச்சியடைந்து மதுரை ஸெயிண்ட்மேரி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராயிருக்கும் திரு. R வீரராகவையங்கார் ஆசிரிய ருடைய மற்றொருதம்பிகுமாரராவர்; (4) சங்கத்துத்தனித் தமிழ்ப்பரீக்ஷைகளிலும் சென்னைப் பல்கலைக்கழகத்துத் தனித் தமிழ்வித்வான்பரீக்ஷையிலும் தேறி மதுரைக்கல்லூரியில் தமி ழாசிரியராயிருக்கும் T. இராமாநுஜையங்கார் ஆசிரியருடைய பெண்வயிற்றுப்பேரனாவர்; (5) சென்னைப் பல்கலைக்கழகத்து வித் வான்பரீக்ஷையில் தேர்ச்சியடைந்து இராமநாதபுரம் ஜில்லா திருப் புத்தூர் போர்டு உயர்நிலைப்பள்ளியில் தலைமைத்தமிழாசிரியராயிருக் கும் K நரஸிம்மையங்கார் ஆசிரியருடைய மற்றொரு பெண்வயிற் றுப்பேரனாவர். இவர்களேயன்றி இவர் குடும்பத்துள் இளம்புலவர்க ளும் பலர் உளர். இவரெல்லாம் ஆசிரியர்பால் வான்முறையாற் பயின்று தேர்ச்சிபெற்ற மாணவருமாவர்.

ஆசிரியர்வாழ்க்கையில் ஆடம்பரமின்றி நிகழ்ந்ததுபோலவே அவரது சரமநிலையும் அவருடைய உறவின்முறையாரும் நட்பினரும் மாணவரும் சூழ்ந்து துதிக்க, வேதவேதியர் மறைமுறையிற் சடங்கியற்ற ஆடம்பரமின்றி நிகழ்ந்தது. உயர்குணங்கட்கெல்லாம் உறைவிடமாய் உலகினரொழுகலாற்றுக் கொரு கட்டளையாய் முக்கால நிகழ்ச்சிகளையும் நுணித்துணரும் அறிவுத்திறனொடுதிகழ்ந்த ஆசிரியர்வரலாறனைத்தும் எழுதின் மிகப்பல்கும்.

ஆசிரியர்பால் நட்புடைய புலவர்களும் அவர்பாற் பயின்ற மாணவர்களும் அவர்பிரிவாற்ருது எழுதிய அநுதாபக் குறிப்புக்களும் பாடிய இரங்கற்பாக்களும் வந்துகொண்டேயிருக்கின்றன. அவற்றையெல்லாம் வெளியிடின் அளவிறந்து விரியுமாதலின் அவற்றுள் ஆசிரியர் பெருமையும் வரலாற்றுக்குறிப்புக்களும் அமைந்த ஒருசிலவற்றையேகொண்டு இச்செந்தமிழ்ப்பகுதி ஆசிரியருடைய நினைவுமலராக வெளிவருகிறது.

ஆசிரியர்பிரிவால் தமிழ்மடந்தை தலைசிறந்த செம்புலச்செல்வப்புதல்வனை யிழந்தாள்; தமிழ்ச்சங்கம் அரை நூற்றுண்டு பேராசிரியராய்த்திகழ்ந்து தம்முடைய கற்பிக்கும் ஆற்றலாற் பலநூறு புலவர்களைத் தோற்றுவித்த தலைமைப்புலவரையிழந்தது; மாணவர் மதிநுட்பம் நூலோடுடையராய்ச் செலச்சொலல் வல்லராய்ச் சோர்விலராய்விளங்கிய ஆசிரியப்பெருந்தகையை இழந்தனர்; செந்தமிழ்ப்பத்திரிகை தன் பேராசிரியரை யிழந்தது. ஆசிரியர்குடும்பம் உயர்ந்த தலைவரையிழந்தது. எனினும், அவர் தம் புகழுடம்பொடு நம்மிடைநெடிதுநின்று தமிழ்தழைய அருளுக.

ஆசிரியரைப் பிரிந்து ஈடுசெய்யமுடியாத பெருநட்டமடைந்து அவலிக்கும் அனைவர்க்கும் நம் அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியரான்மா இறைவனடியிணை நீழலிற் சாந்தியுறுக.

உதவிப்பத்திராசிரியர்.

ஸ்ரீ:

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலைத் தலைமையாசிரியரும்
செந்தமிழ்ப்பத்திராசிரியருமான

திரு. நாராயணையங்கார்ஸ்வாமி பிரிவாற்று து

அன்பர்கள் எழுதியனுப்பிய

அநுதாபக்குறிப்புக்கள்

மஹாவித்வான் ஸ்ரீ. உ. வே. பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசார்யஸ்வாமி எழுதியவை

செந்தமிழாசிரியர் அசௌக்கியமுற்றிருப்பதுதெரிந்து எழுதியது.

"இன்று கார்டுபார்க்க மிகவும் வெசுமுண்டாயிற்று.

'தஸ்மிந்நஸ்தமிதே ஹீஷே கௌரவாணாம் யசோரவௌ ।
ஜ்ஞாநாந்யபி ஸவிஷ்யந்தி'

என்ற கண்ணன் ஸ்லோகமே நினைவுக்குவந்து வருந்துகிறேன். 1913-ஆம் ஆண்டுமுதல் அந்த ஸ்வாமியின் திருவருளுக்கு இலக்கானவன் நானும். ஜ்ஞாநநிதி:; ஸௌஜந்யஸேவதி:. திருமேனிப் பாங்குக்கு எழுதவேணும்."

இதி
ஸ்ரீ அண்ணு
காஞ்சி. 30-7-'47.

செந்தமிழாசிரியர் திருநாடலங்கரித்தது தெரிந்து எழுதியது.

காஞ்சீபுரம் 31-7-'47.

விஷயம் தெரிந்தது. ஞாநஸூர்யன் அஸ்தமித்ததாகவே நினைக்கிறேன்.

கஸ்தூ ஸர்வஜ்ஞகல்பே த்ரிதஸபுரகதே க்லேஷம் ஸித
ராமாநுஜார்ய ப்ரணீதஸூக்திஷ்வதிஸய ஸம்ப்ரதாநைக்யவாசி ।
ஹாரராஜகண்டாஸ்ம்ருதிஸௌகந்த்ய ஸாரணி நாராயணாயேதி ஸா
விதாநுஸீயமாநோ: கடாக்ஷவிஸ்வாஸ்தேஜ வக்ஷம் வைஷ்ணவ: ॥

ஸர்வஜ்ஞகல்பே ஸாக்ஷாத்ராமாநுஜம் ஸௌலோகஸரெ ।
ஸ்ரீநாராயணஸூரீந்த்ரே ஹாரராஜே திவம் யயௌ ॥

𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌪𑌾𑌵𑌿𑌨𑌯𑌸𑍌𑌹𑌾𑌦𑌦𑌿𑌤𑌿𑌭𑍀𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑌵𑌾𑌣𑍀𑌯𑍋𑌽
𑌨𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌾𑌹𑌾𑌯𑍍𑌯𑌵𑌾𑌰𑌯𑍇𑌤𑌿 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑌯𑍇𑌤𑍍𑌯𑌾 𑌽𑌦𑌿𑌨𑌿𑌃 ।
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌨𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌿𑌹𑌾𑌯 𑌨𑌦𑍀 𑌵𑌜𑍍𑌞𑌾𑌵𑌿𑌯𑍋𑌗𑌾𑌽 𑌨𑌵𑌃
𑌶𑍍𑌰𑍀𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌨𑌾𑌕𑍇 𑌰𑌵𑌿𑌹𑌾𑌯𑌾𑌸𑍍𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑌦𑍇𑌶 ॥

இப்படி எத்தனை ஸ்லோகமியற்றினும் போதாது.

தாஸந்

ஸ்ரீ. அண்ணா.

மாஜி ஜில்லாநீதிபதி திவான்பஹதூர் ஸ்ரீ. உப. வே.

V. பாஷ்யமையங்கார்ஸ்வாமி எழுதியது.

கீழ்ப்பாக்கம், சென்னை. 6—8—47.

"ஸ்ரீ திருநாராயணையங்கார்ஸ்வாமியின் தேகவியோகத்தை அறிந்து மிகவும் துக்கிக்கிறேன். அடியேன் மதுரையிலிருந்த போது ஸ்ரீ ஸ்வாமியை ஸேவித்திருக்கிறேன். ஸ்வாமியினுடைய ஞாநமும் வித்வத்தும் திராவிடபாஷாநிபுணத்வமும் அபாரம். ஆனாலும் அவைகளுக்காகவன்று அடியேன் ஸ்வாமியிடம் ஈடுபட்டது; அடியேனை மேல்விழுந்து ஆகர்ஷித்தவை ஸ்வாமியின் ஸௌஸீல்யமும் ஸௌலப்யமும். ஸ்வாமியினுடைய பக்திவைராக்யங்களும் விநயமும் அப்ரதிமம். ஸ்வாமியின் நித்யவிபூதிப்ராப்தி லீலாவிபூதிக்குப் பெருத்தநஷ்டம். பகவத்ஸங்கல்பம் அதுவானால் என் செய்வோம் யாம். ஸ்வாமியினுடைய தேகம் மறைந்தபோதிலும் அவருடைய ஞானமும் கல்யாண குணங்களும் என்றும் மறையக்கூடியனவையல்ல. அவைகளே நமக்குச் சரண்."

வேணும்,

பாஷ்யகார தாஸந்

உயர்திருவாளர் மஹாமஹோபாத்தியாய பண்டிதமணி

மு. கதிரேசச்செட்டியாரவர்கள் எழுதியது.

"தமிழ் வடமொழி இரண்டிலும் சிறந்த புலமைபடைத்த வித்வான் திரு. நாராயணையங்கார்சுவாமிகள் ஆசாரியன் திருவடியடைந்தசெய்தி தமிழுலகத்திற்குப் பெரிதும் வருத்தம்விளைவிப்பதே. இவர்கள் நுண்ணிய மதிவன்மையும், தருக்கநூற்பயிற்சியும் உடையவர்கள்; 'செந்தமிழ்ப் பத்திராதிபராக நெடுங்காலம்

இருந்து செம்மைபெற நடாத்திவந்தவர்கள்; மாணவர்க்கு உயர்ந்த நூல்களைப் பயிற்றுவதில் பெரிதும் திறமைவாய்ந்தவர்கள். இவர்கள் எழுதிய ஆராய்ச்சியுரைகளும், பிறவும் அறிஞருலகை மகிழ்வுறுத்தும் இயல்பின. 'மதுரைத் தமிழ்ச்சங்கத்து'த் தலைமையாசிரியராகவும், பத்திராதிபராகவும் இருந்து செய்த அரியதொண்டுகள் பாராட்டத்தக்கன. இவர்கள் பிரிவுகுறித்து என் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

மு. கதிரேசன்.

அண்ணாமலைபல்கலைக்கழகத்து மாஜி தமிழ்ப்பேராசிரியரான உயர்திரு. ச. சோமசுந்தரபாரதியார் M.A. B. L. அவர்கள் எழுதியது.

பசுமலை 6—8—47.

"செந்தமிழாசிரியர் வியோகம் தமிழறிஞரனைவர்க்கும் தாங்கரிய இழவு. நிரம்பிய இருமொழிக்கல்வியும் வரம்பளந்த அளவை நூலறிவும் நுண்மதியும் நடுவுநிலை திறம்பாத உளச்செம்மையும் சாந்த சீலமும் வாய்ந்த பெரியாரை இழந்த தமிழகம் வறுமையுற்றதில் வருந்தாதார் இருந்திலாதார். தம் மதியைப்போல் வயதும் நிறையப்பெற்று மதுரைச்சங்கத்துக்கும் மாணவருக்கும் விலையிலாக் கலைத்தொண்டாற்றி மாண்டபுலவரும் மாண்டது நிலையிலாவுலகியல்நீர்மையன்றோ."

ச. சோ. பாரதி.

சென்னைப் பல்கலைக்கழகத்து மாஜி தமிழாராய்ச்சித்துறைத்தலைவர் ராவ்ஸாஹிப். திரு. S. வையாபுரிப்பிள்ளையவர்கள் (B.A., B.L.) எழுதியது.

மயிலாப்பூர் 3-8-'47.

"செந்தமிழாசிரியர் மறைந்துவிட்டதுதெரிந்து அவர்கள் நண்பர்களாகிய நாங்களனைவரும் பெருந்துயரமடைகின்றோம். இருமொழிப்பயிற்சியிலும் இலக்கணம் தர்க்கம் என்ற துறைகளிலும் அவர்களைப்போன்ற வித்துவான்களை இனி எப்பொழுது காணப்போகிறோம்? அவர்களுடைய குளிர்ந்த முகமும் இனிய உபசாரமொழியும் என் இதயத்தில் எப்பொழுதும் தங்கியிருக்கும்"

அன்பன் S. வையாபுரிப்பிள்ளை.

விருதுநகர்த் தமிழ்த்தென்றலாசிரியர் வே. வ. இராமசாமி அவர்கள் எழுதியது.

விருதுநகர் ஆடிமீ 18௳

"செந்தமிழாசிரியர் இருநாடலங்கரித்தமை அறிந்து பெரிதும் வருந்துகின்றேன். இருமொழிப்புலமையும் செழுந்தமிழ்க்கொழுமையும் தருக்க நுணுக்கமும் புலவர்வியக்கும் நயங்கள் பலவும் அமைந்து தமிழ்ச்சங்கக்கல்லூரித் தலைமையாசிரியப்பதவியை நீண்டகாலந் தாங்கி அவர்களாற்றிய அரும்பெறற்றொண்டு தமிழ்ப் புலவர்வரலாற்றிலே தக்க இடம்பெறும்."

வே. வ. இராமசாமி.

யாழ்ப்பாணத்துவித்வான் சி. கணேசையரவர்கள்எழுதியது.

வருத்தலைவிளான், தெல்லிப்பழை.

6—8—47.

"மகாவித்வான் ஐயங்கார்ஸ்வாமிகளுடைய பெரும்பிரிவை யறிந்தபோது உள்ளம் கலக்கமடைந்தது. அவர்களுடைய கல்விப் பேரறிவும் அறிவிற்கேற்ற ஒழுக்கமும் நற்சிந்தையும் பிறரொருவருக்கு மில்லாமையை யான் உண்மையாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர்களிடம் கற்றுப் பலர் பண்டிதசிரேஷ்டர்களாக விளங்குவதையும் யான் அறிவேன். அவர்களைப் போலச் செந்தமிழை வளர்ப்பதற்கு யார் இனி வரப்போகின்றார்கள்! அவர்களை இழந்தது தமிழ்நாட்டின் தவக்குறைவே. அவர்களைப்போலத் தெளிவும் இனிமையும் தூய்மையும் வாய்ந்த உரைநடையை யார் இனிச் செந்தமிழ்க்கு அளிக்கப்போகின்றார்கள்? துக்கம்! துக்கம்!! பெருந்துக்கம்!!! ஐயங்கார்ஸ்வாமிகளுடைய உயிர் சாந்தியடையுமாறு இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்"

இங்ஙனம்,

சி. கணேசையர்.

ஸ்ரீ:

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலைத் தலைமையாசிரியரும்

செந்தமிழ்ப்பத்திராசிரியருமான

திரு. நாராயணையங்கார்ஸ்வாமிபிரிவாற்றாது

அன்பர்கள் இயற்றிய

இரங்கற்பாக்கள்.

செந்தமிழ்ப்பத்திரிகையின் உதவியாசிரியர்

T. K. இராமாநுஜையங்கார் இயற்றியவை.

1 நாடுபுகழ் மிக்கதிரு நாராய ணாரியநீ
வீடுபுகல் கேட்டழுங்கும் மேதினியோர் வெந்துயரம்
ஆடுகொடி மாடத் தயோத்தியர்கோன் அன்றொருநாட்
காடுபுகக் கண்டோர் கரைந்ததுய ரிற்கொடிதே. (1)

2 [1]திக்குற்ற கீர்த்தியெனும் தெய்வத் தமிழ்க்கவியின்
மிக்கபொரு ளெல்லாம் நினைந்து வெயின்மெழுகாய்
நெக்குருகி யந்நிலையே நீள்விசும்பிற் சென்றனையால்
மக்களிலே நின்னைப்போல் மாண்டா ருளரேயோ. (2)

3 தக்கார்கள் சூழ்ந்து [2]சரணா கதிசாற்ற
மிக்காரவ் [3]ஆர்த்தி வியன்[4]சார நூலோதத்
தொக்கா ரமரர் தொழுது வரவேற்பப்
புக்கார் திருநாட்டுன் போல்வாரைக் கண்டிலமே. (3)

4 எட்டைமிகுத்தாலும் என்றும் இன்றமிழா லாழ்வார்செய்
பாட்டை மொழிந்துகண்ணன் பாதம் பரவியெதிர்க்
கோட்டை யுறையுங் குறிக்கோ ளுடையைதிரு
நாட்டை யடைந்தனையின் றென்னோ நவில்வாயே. (4)

---

[1] இது, திருவரங்கத்தமுதனார் இராமாநுஜர்மீதியற்றிய நூற்றந்தாதியின் 26ஆம் பாடல். [2] சரணாகதியென்பது சரணாகதிகத்யம் என்னும் தோத்திரநூலைக்குறித்துநின்றது. [3] ஆர்த்தி - மணவாளமாமுனிவர் இயற்றியருளிய ஆர்த்திப்பிரபந்தம். [4] சாரநூல் என்றது அருளாளப்பெருமாளெம்பெருமானார் இயற்றியருளிய ஞானசாரம் பிரமேயசாரம் என்னும் நூல்களை.

5 வடமொழிதென் மொழிக்கடலின் வரம்பளந்து கரைகண்ட
மடமறுநின் மதிவலியால் வையமெலாம் தமிழ்வளர்த்தாய்
படவரவி லறிதுயில்கொள் பரமனுல னுமதன்சீர்
நடமிடவே வளர்ப்பதற்கு நடந்தனையோ நாவலனே. (5)

6 மன்னும் உபய மறையின் முடிபொருளும்
உன்னியுன்னி யுன்போ லுரைப்பார்தன் னுட்டிலிலை
என்னநினைந் துன்னை யிருவிசும்பில் ஏற்றினனே
எந்நிலமும் தாளால் அளந்த இறையோனே. (6)

7 மேனுட் டிளவரசு நல்கும் வியன்பரிசு
தானுட்டிக் கொண்ட தமிழ்க்குரிசில் நீபுகுத
மானுட்டுத் தொண்டரொடு வந்து வரவேற்று
வானுட் டிளவரசு வண்பரிசு நல்கினனே. (7)

8 சங்கத் தமரம் தழைமதுரை மன்னுதமிழ்ச்
சங்கத் தமர்ந்து தமிழ்வளர்த்தாய் நீபுகுதச்
சங்கத் தமிழ்மாலை தாங்குந் தடம்புயத்துச்
சங்கத் தமரர் தலைவன்வர வேற்றனனே. (8)

9 எல்லாரும் ஏத்துபுகழ் ஏய்ந்தொளிரும் எந்தாய்நீ
கல்லாத கலையில்லை காணுத பொருளில்லை
வெல்லாத பகையில்லை மிகநுணுகும் நின்மதிதான்
செல்லாத துறையில்லை தெளியாத மறையிலையே. (9)

10 வாக்காலும் மனத்தாலும் மதிக்கருநின் மதிவலியால்
நோக்காத நூலில்லை நுவலாத வுரையில்லை
நீக்காத பிழையில்லை நினையாத நலமில்லை
ஆக்காத செயலில்லை அளவாத பொருளிலையே. (10)

11 மேதினியோர் போற்ற மிகவிளங்கும் எந்தாய்நீ
சாதக்சந்திரிகையினைத் தமிழாக்கித் தந்தனைபன்
மேதகவார் கட்டுரைகள் செந்தமிழில் விரித்தெழுதித்
தீதகலச் செவியுணவு தெவிட்டும்வகை நல்கினையே. (11)

12 இப்புவியோர் புகழ்மாற வலங்காரம் இனிதளித்தாய்
எப்புவியும் உவந்தாளும் பழமொழிமுன் னிருநூறுக்
கொப்புயர்வற் றொளிர்கின்ற குறிப்புரையும் உதவியொரு
தப்பறவே அநுமான விளக்கநூல் தந்தனையே. (12)

13 'செய்யேல்மறம்' என்று தேசிகனுர் செய்கவிக்குக்
கையிலங்கு நெல்லிக் கனியாப் பொருள்விரித்தாய்
ஐயனெழின் மாறனருள் 'அண்டகோள'த் தமிழ்க்குப்
பொய்யில் புலவரெலாம் போற்றவுரை பொறித்தனையே. (13)

14 வையமெலாம் போற்றுகம்பன் வண்காவி யங்கொண்டு
துய்ய பரதாழ்வான் வைபவங்கள் தோற்றுவித்தாய்
ஐயமற ந்யாயப்ர வேசத்தொ டான்றதமிழ்ச்
செய்யமணி மேகலையின் சீர்தூக்கி யீந்தனையே. (14)

15 அன்றுமுதற் சங்கத் தகத்தியனுர் பன்னிருவர்க்
கின்றமிழ்கற் பித்த இசையினும்நான் காஞ்சங்கத்
தின்றிலகி எந்தாய்நீ எண்ணில்பலர்க் கத்தமிழ்தான்
என்றுமுள தென்றியம்ப ஈந்த இசைபெரிதே. (15)

16 தந்தையாய்த் தாயாய்த் தலையளிசெய் தாயெம்பால்
வந்த இடரனைத்தும் மாற்றிநனி வாழ்வித்தாய்
வெந்துயருள் மூழ்களமை விட்டகன்று யின்றிதுவென்
செந்தமிழ்தேர் ஆரியநீ செப்புதிரு வாய்மலர்ந்தே. (16)

17 ஊட்டி வளர்த்தாய் உயர்செந் தமிழ்வேதப்
பாட்டும் உரையும் பயிற்றினுய் விண்படர்ந்தாய்
கேட்ட மறையெல்லாம் தெளிவித்துக் கேடகற்றி
வாட்டமற எம்மை மகிழ்விப்பார் ஆரினியே. (17)

18 அறிவால் ஒழுக்கத்தால் ஆன்றோர் மதிக்கச்
செறியும் குணநலத்தால் தேசால் தெளிவால்
நெறியறிந்து கற்பிக்கு நீர்மையினுல் ஞாலத்
தறிஞரிலே நிற்குநிக ராகுவா ராருளரே. (18)

19 கோதில் உளத்துக் குழவிகளும் கூர்விழைவின்
ஓதற் கெளிதா உயர்தமிழ்நூ லாராய்ந்து
போதிக்க வல்ல புலமுடையாய் நின்னைப்போற்
போதிக்க வல்லார் புவியின்மேல் ஆரினியே. (19)

20 சேனு வரையருரை தேவர் திருக்குறளுக்
கானுப் புலவன் பரிமே லழகனுரை
தேனூறு செஞ்சொல்வளச் சீராம காதையுரை
வானு ரமுதா வழங்கவல்லார் ஆரினியே. (20)

21 ஏய்ந்தபுகழ் வேதாந்த தேசிகர்செய் யின்றமிழில்
தோய்ந்த பொருளெல்லாம் சொல்லவல்லார் ஆர்; பெருமை
வாய்ந்த பழமொழியின் மற்றையிரு நூறுக்கும்
ஆய்ந்து பொருளுரைக்க வல்லாரிங் காரினியே. (21)

22 செய்யதமிழ் வாணர் தெளிதற் குரியபல
ஐய வினவிடைகள் ஆராய்ந்து செந்தமிழில்
வையமெலாம் போற்ற வரைந்துவெளி யிட்டனையால்
ஐய!இனி ஐயம் அறுப்பாரிங் காருளரே. (22)

23 பாண்டித் துரைநிறுவும் பைந்தமிழின் சங்கத்தில்
ஈண்டு புலவோர்க் கிறைவனு வீற்றிருந்தே
ஆண்டோரு நாற்பத்தாறும் ஆன்ற தமிழ்வளர்த்தாய்
யாண்டுற்றாய் எந்தாய் இனியதமி ழேங்கிடவே. (23)

24 சென்னைசென்று நீதான் திரும்புமள வும்பிரியா
தென்னுயிரென் றுயவ் வுரையிறவா தேயிருந்தாய்
அங்கிலகண் டுன்னை யறிவிலுயர் வீடுமனு
உன்னி யுளமுருக வைத்தகன்றாய் உத்தமனே. (24)

25 காண்டற் கரிய கவியரசே கற்பகம்போல்
வேண்டிற் றுதவி விழைந்து புரந்தகன்ற
பாண்டித் துரையரசன் பாற்சென் றடைந்தனையோ
தூண்டுற்ற காதன்மிகும் சோதரர்பாற் சென்றனையோ. (25)

26 நேசமிகும் *வேங்கடா சாரியரை நேர்ந்தனையோ
தேசுதிகழ் †ஸ்ரீநிவா ஸாரியர்பாற் சென்றனையோ
மாசில்புகழ்ச் சிங்கப் பெருமாள்பால் மன்னினையோ
பேசுவாய் யாம்செய் பிழைபொறுக்கும் பெற்றியனே. (26)

27 சென்றவிடத் தெல்லாமுன் சேவடிக்கே தொண்டுபுரிந்
தொன்றி யிருக்கு மதுவே யுறுதியென
நின்றவெனை நீத்தொருநீ நீள்விசும்பு புக்கனையான்
என்றுன் றிருவடிக்கீழ் இன்புற்றிருப் பேனே. (27)

---

* இவர் செந்தமிழாசிரியர்க்கு வடமொழிவியாகரண நூல்கற்பித்த ஆசிரியர்.

† இவர் சமயநூலாசிரியர்.

28 *ஆசாரியனைப் பிரிந்திருப்பார் ஆரென்று
தேசாரும் மாமுனிவர் செப்புமுரை தேறுயோ
ஆசானுய்த் தந்தை முதலனைத்தும் ஆய்நின்ற
ஈசா உனைப்பிரிந்தேன் எவ்வாறு தேறுவனே. (28)

29 துன்னுபஞ்ச பூதத் தொடர்பாற் பிறந்திட்ட
நின்னுடம்பு மாயினும்நீ நீண்ட புகழுடம்பால்
இந்நிலத்து ளெம்மிடையே தங்கியெமக் கென்றுமின்பம்
மன்னுபெரு வாழ்வளித்தி யென்றுனடி வாழ்த்துவனே. (29)

30 உன்பெருமை யெல்லாம் உரைத்தற் கரிதெனினும்
என்சிறுமை யெண்ணு தியம்ப எழுமாசை
மன்பரவு சீர்த்திமிக வாய்ந்துதிகழ் எந்தாய்!யான்
என்பிறவி தோறுநின்சீர் ஏத்த அருள்வாயே. (30)

31 சருவசித்துக் கற்கடகம் சார்பூர்வ பக்கத்
தொருபன் னிரண்டுதிதி யொண்மூல நன்னுள்
மருவியசெவ் வாயென்பர் மண்ணேர் இரங்கத்
திருமருவு நாரணனு ராரியன்றுள் சேர்தினமே. (31)

மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர்

திரு. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றியவை.

32 வடமொழிதென் மொழியென்னும் வாரிதியிற்
குளித்துமணி வாரி யீந்து
திடமதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலைத்
தலைமையா சிரிய ராகி
மடனகற்றுந் தமிழுணர்த்துந் திருநாரா
யணக்குருமா மணியே யின்று
படவரவப் பாயலினுன் பரமபதத்
திருவைகுந்தப் பதியுற் றுயோ. (1)

---

*உபதேசரத்தினமாலை செய்யுள் 64.

33 எத்தனைபேர் நின்பானற் றமிழ்பயின்று
பண்டிதரா யிங்கு மெங்கும்
வித்தகமாம் தமிழ்பயிற்றி விளங்குகின்றா
ரிவைநினருண் மேன்மை யன்றோ
அத்தனைபேர் களும்நினது பிரிவுதுய
ராற்றாரா யடையுந் துன்பம்
இத்தரையி லொருநாவே னிசைத்திடுதற்
கியல்வதொன்றோ விறைமை மிக்கோய். (2)

34 ஒன்றுமறி யேனையுமுன் னுடனிருத்தித்
தமிழ்பயிற்று மொருவ னாக்கி
நன்றுபுரி கருணைமிகு நல்லுளத்தோய்க்
கியான்செய்சிறு நலனு முண்டோ
என்றுனது திருமுகங்கண் டின்புறுவேன்
றுயர்க்கடலுக் கெல்லை காண்பேன்
பொன்றினதுன் பொய்யுடலே புகழுடலெவ்
வூழியினும் பொன்றா தன்றே. (3)

35 செந்தமிழ்ப்பத் திரிகையினுக் காசிரியப்
பெருந்தகையாய்த் திகழ்ந்து தேசம்
உயர்ந்திடுகட் டுரைகள்பல வுயர்நடையில்
வரைந்துதந்த வொப்பி லானே
வந்தமரர் வரவேற்று மந்தார
மழைபொழிந்து வாழ்த்துக் கூற
அந்தமிலாப் பசுந்துளவோ னடியிணைக்கீ
ழமர்ந்தனையோ வருளாள் வோனே. (4)

36 தருக்கவியா கரணநூ லையமுற்றோ
ரினியெவரைச் சார்ந்து கேட்பார்
மருக்கமழ்பைந் துழாயலங்கன் மாலடியார்க்
கவையுரைக்க மனங்கொண் டோவத்.

திருக்கிளரும் மணிமார்பன் சேவடிப்பத்
திமைமிகுந்தோர் தெய்வப் பாடல்
உருக்கமுடன் பகர்ந்துதொழு துறையுமூல
குற்றனையெற் குரைசெய் வாயே. (5)

37 அப்பனெனும் பெயர்புனைநின் னொருசுதனுங்
கற்பினுக்கோ ரணியென் றுன்றோர்
செப்புநின்பத் தினியாரும் புதல்வியரும்
பவுத்திரருந் தினமுஞ் சூழ்ந்திங்
கொப்பரிய பணிபுரிய வுடனுறைந்த
நின்பிரிவை யுன்னி யுன்னி
இப்பொழுதிங் குறுதுயரங் காணுயோ
கலைக்கடலுக் கெல்லை கண்டோய். (6)

38 மன்னர்புகழ் ஐந்தாம்ஜார்ஜரசர்பிரான்
பெற்றமுதல் மைந்த ரான
பன்னரிய திறல்சேர்வேல்ஸ் இளவரசர்
பொற்கடகம் பைம்பொற் சால்வை
யின்னபரி சளித்திடப்பெற் றிருநிலம்போற்
றிடவாழ்ந்த வெம்மா னேநின்
தன்னையிழந் திடுமிந்நாள் சகத்தினுக்கு
நன்னுளாச் சாற்றெ ணுதே. (7)

39 தந்தையினுஞ் சதமடங்குன் றனையெனுமுன்
றம்பிபெற்ற தநய னை
சிந்தையொடுன் பணிபுரிந்து திகழும்இரா
மாநுஜப்பேர்ச் சீரி யோனை
மைந்தனிலும் பன்மடங்கு மதித்தருள்செய்
தனைநினது மாண்பு முற்றும்
முந்தவுணர்ந்திடு மன்னன் நின்பிரிவை
யாற்றுவனே முறையோர் வோனே. (8)

40 சென்னைசென்று வரும்வரையென் னுயிர்பிரியா
தெனவவற்குச் செப்பி யாங்கே
முன்னர்நின் றன் பணியனைத்தும் கனிசிறப்ப
முழுதாற்று முதன்மை யீந்தாய்
அன்னவுன்றன் கருணையினை நினைந்துநினைந்
தகநெகிழ்ந்திங் காற்று றற்ற
இன்னல்களைந் தவன்மேலும் இனியபல
பேறுபெற இதஞ்செய் வாயே. (9)

41 அந்தாமப் பரந்தாமன் றிருநாட்டை
யலங்கரித்த வத்தா வாங்கு
நந்தாத தெய்வீக நிலையுடனென்
னனையருமெந் நாளும் நின்னை
யெந்தாயென் றழைத்திடுநின் மைந்தனுநின்
குடும்பமுமென் றென்றும் வாழச்
சந்தான கற்பகம்போ லருள்புரிந்து
பேரின்பந் தழைத்து வாழி. (10)

வேறு

42 சருவசித் தெனச்சொல் யாண்டுகர்க் கடகந்
தனிற்கதிர் சார்மதி திகதி
மருவுபன் மூன்று மங்கலன் வாரம்
வளர்பிறைத் துவாதசி மறைதேர்
அருவரைத் திபம் நிகர்திரு நாரா
யணப்பெய ரணிதமி ழாசான்
திருவளர் மார்பன் றிருவடி நீழல்
சேர்ந்துவீற் றிருந்திடு தினமே. (11)

மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர் இராமநாதபுரம்
திருவாளர் K. சிவஞானம்பிள்ளையவர்கள் இயற்றியவை.

பாட்டெண் 43—57

ஆரியமும் தீந்தமிழும் ஆகுமிரு கடல்களிலே யமிழ்ந்து மேலாம்
சீரியநற் கரைகண்ட திருநாரா யணப்பெயர்கொள் தேவா சாலக்
கூரியநன் மதிபடைத்து நேரியசீ ரொழுக்கமுறும் கோதி லாதாய் !
பாரினைநீத் தாசான்றன் பதமடைந்தாய் என்றவுடன் பரிவுற் றேனே. (1)

மூலமறைப் பொருளுணர்ந்து வேதாந்த சித்தாந்தம் முறையாக் கற்றுச்
சீலமுடன் வாழுமுயர் திருநாரா யணப்பெயர்கொள் செல்வா ! நின்சீர்
பாலவனத் தம்புரந்த சீர்ப்பாண்டித் துரைதானும் பலகாற் கேட்டு
மாலெனவே நினைமதித்துப்பைந்தமிழ்தேர்ந்தின்புற்றுவாழ்ந்திட்டானே. (2)

பூவலயம் புகழ்முகவை நகர்ச்சோம சுந்தரப்பேர் புனைமா டத்து
மேவுதமிழ்ச் சங்கங்கண் டுக்கிரபாண் டியன்*இறையா வீற்றி ருக்க
நாவலருங் கீர்த்திமிகு திருநாரா யணப்பெயர்கொள் நம்பி ! நீதான்
பாவலருள் உன்னன்பர் பலரொடுமன் றமர்ந்ததிறம் பகர்தற் பாற்றே. (3)

சத்தியமும் தண்ணருளும் தாங்குதிரு நாரணப்பேர்ச் சரதா ! உன்னைப்
பத்தியுடன் வரவேற்று வேத்திரத்தா சனமுனக்குப் பரிவொ டீந்து
நித்தியா நித்யமெனும் வாதமுறை நிகழ்வித்து நீதான் வென்று
சித்தியடைந் ததனையவை யோரறியப் †பாண்டியன்றான் சிறப்பிப் பானே.

இமிழ்கடல்சூழ்வரைப்பினிலேதமிழ்வளர்க்கும்பரம்பரையிலிலங்கிவாழ்ந்த
அமிழ்தமொழிச் சேதுபதி பாற்கரவேள் முகவையினி லந்நாள் மும்மைத்
தமிழ்தழைய நிறுவுசங்கம் நிலவுவதைப் பாண்டியற்குச் சாற்றிச் சைவம்
கமழ்மதுரைதனில்நான்காஞ்சங்கநிறுவிடச்செய்தாய்கலைவல்லோனே. (5)

தென்னவர்கள்கண்டசங்கம்மூன் றும்போய்த்தமிழ்தேய்ந்தசிறுமைநோக்கித்
தொன்மதுரை தனினான்காஞ் சங்கமன்று தாபித்த துயோ னுய்ந்து
நின்னையுமே மேலான ஆசிரிய னாக்கிவைத்தா னீதா னேற்று
நன்னயமாய் நடத்திவந்தாய் நாரணனே எங்குற்றாய் நவிலு வாயே. (6)

மூலமே யென்றழைத்த குஞ்சரத்தைக் காத்தருளும் முதல்வன் பேரே
பாலகுமா ரவ்விருத்தப் பருவமெலாம் மனத்தினிலே பதித்து வாழ்ந்த
சீலதிரு நாரணப்பேர்ச் சீமானே ! அத்தவத்தின் செய்கை யாலே
காலனுனை நினையணுகான் எங்குற்றாய் நீயெனக்குக் கழறு வாயே. (7)

---

* † உக்கிரபாண்டியன், பாண்டியன் என்பவை பாண்டித்துரைத்தேவரின் பரியாயநாமங்கள்.

மன்னவரிற் சிறந்தவெங்கள் சண்முகரா ஜேசுவர வள்ளல் தானும்
கன்னலினும் இனியவுன்றன் கவிகேட்டுக் கனகமெடல் களிப்பா யீந்து
பொன்னிலவுசால்வைகொடுபோர்த்தியிட்டானவன்முன்னோர்போலஇன்னும்
சொன்னமுமே நன்கீவான் எங்குற்றாய் நாரண!நீ சொல்லு வாயே. (8)

கொற்றவர்கள் மகிழ்டீஸீ ஸ்ரீநிவா ஸப்பெயரெங் கோமான் நின்போற்
கற்றவரில் லென்றொருநீ கவலையுறு வண்ணமெலாங் கருதிச் செய்து
நற்றமிழிற் றேர்ச்சியுற்றோர் சபைநடுவே பொற்கிழியும் நல்கினனே
எற்றினுக்கென் றிம்பர்விடுத் தும்பருற்றாய் நாரண!நீ இயம்பு வாயே. (9)

சந்ததமும் தமிழ்க்குழைத்த சாமிநா தனைப்பார்க்கச் சார்ந்தாய் கொல்லோ
நிந்தையிலாக் கவியரசாய் நிலவியரா கவற்கான நினைந்தாய் கொல்லோ
சொந்தமுளார் தமைப்பார்க்கச்சென்றனையோ ஆழ்வார்செய்தொன்னூலாய்ந்து
பந்தமறத் திருவரங்கன் பதந்தொழுஞ்சீர் நாரண!நீ பகரு வாயே. (10)

வீரியங்கொள் பாற்கரனும் பாண்டியனும் பொன்னாட்டில் மேவி யுற்றார்
நேரியநின் மதிக்குகந்த புலவரங்கு முன்சென்று நிலைத்தா ரென்றே
ஆரியமொன் றேயுடைய அந்நாட்டிற் றமிழ்ச்சங்கம் அமைக்க வேண்டிச்
சீரியநா ராயணனே சென்றனையோ நீயெமக்குச் செப்பு வாயே. (11)

பாராண்ட மன்னர்களிற் கீர்த்தியுறும் பாற்கரப்பேர்ப் பண்போன் மைந்தர்
சீராஜ ராஜேசச் செம்மலும்ரா ஜாராமத் திறல்சேர் வேந்தும்
நேராக நின்பாற்செந் தமிழ்பயின்ற திறநினைந்து நினைந்து விண்சார்ந்
தாராத காதலவர்க் கமுதனைய தமிழ்பயிற்றக் கடைந்தாய் கொல்லோ.(12)

குருந்தொசித்தா னடியிணைநீ சேர்ந்தாலும் நாரணனுன் குருவே நீதான்
அருந்தவத்தாற் பெற்றமகன் அப்பனெனும் உத்தமற்கிவ் வவனி தன்னில்
திருந்திழைநன் மனைவிமக்கள் ஒக்கலுடன் எந்நாளும் செயிரிலாத
பெருந்திருவும் கலைமாதும் மருவுபெரு வாழ்வருள்வாய் பெரிதும் மாதோ.()

பொன்னுருந் திகிரியினன் புகழொன்றே யன்றியொன்றும் புகன்றி டாத
நன்னாவ லோரேறே நாரணனே நின்பாலே நயந்து கற்றிங்
கெந்நாளும் நினக்கினிதே யியற்றுமிரா மானுசனும் ஏனை யோரும்
பன்னாளும் பார்மிசைநற் புகழுடனே வாழவருள் பாலிப் பாயே. (14)

சருவசித்தான் டாடிதனிற் சார்மூல நன்னாள்
வருசெவ்வாய் பூர்வபக்கம் வாய்ப்ப—மருவுதிதி
பன்னிரண்டி லாசான் பதமடைந்தான் பார்புகழ
நன்னெறியிற் சேர்நா ரணன். (15)

அண்ணாமலைப்பல்கலைக்கழகத் தமிழாசிரியர்

திரு. இ. சே. வரதராஜஐயரவர்கள் இயற்றியவை.

58 தென்மால்சேர் குறுமுனிவன் மறுபிறப்போ
தேவகுரு நிலத்துற் றான்கொல்
பன்மாண்பும் பகர்வதெவ னெனவறிஞர்
பரிதவிக்கப் பாரி னெங்கும்
பொன்மாடக் கூடனகர்ப் புலரிதிரு
நாரணப்பேர்ப் புலவன் மாய்ந்தான்
சன்மார்க்கந் தனக்கொருவன் றனைப்பிரிந்து
புலப்புவிதான் தவித்த தம்மா. (1)

59 தன்னிகரில் பொதியமுனி தந்ததமிழ்க்
கடற்றிளைத்துத் தகவி னாய்ந்து
மின்னுதுகிர் தாளமெனும் விழுப்பொருளைப்
புலக்காத்தான் விழைந்து வாரிப்
பன்னெடுநாள் பயில்பவர்க்கு விருந்தளித்த
பெருந்தகையே பரிவில் காலன்
நின்னுயிரைக் கொண் டொளித்தான்
உயிர்க்கொலைவிட் டறிவுநலம் நேடினானே. (2)

60 பன்னாட்டி னுறுபொருளும் பலநலமும்
படைத்துளதாற் பாரி லென்றும்
முன்னாட்டும் தமிழ்நாட்டின் முளைத்தெழில்சேர்
புலத்துறையின் முற்றி நின்றாய்
பொன்னாட்டை விழைந்தனையாண் டிகலிலராம்
தொல்கேள்விப் புல்வர் உண்டோ
மன்னா செம்புலவர்குழு மகிழ்ந்திடுநா
ராயணப்பேர் மதிவல் லோனே. (3)

61 இருக்குமுதற் பலமறையு முபநிடத
மெனுநூலும் இணையி லாத
தருக்கமுதல் வடமொழிநூல் வருக்கமெலாந்
தகவுணர்ந்து தமிழ்த்தா யென்றுஞ்

செருக்குறநின் றிலகுறுந்தொல் காப்பியமுந்
தொகைநூலும் தெளிந்து கற்றாய்
மருக்கமழுந் துளவனடி யுளங்கொள் திரு
நாரணப்பேர் மறைவல் லோனே. (4)

62 பாவலர்தம் தனிப்புகலாம் பண்ணாருந்
தமிழிருப்பாம் பாடிப் போற்றும்
நாவலர்தம் உயர்தருவாம் எனப்புகழப்
பெருமையுடன் தலைமை தாங்கித்
தேவையினி லரசியற்றும் சேதுபதி
வழிவந்த செம்ம லோர்க்கு
மேவரிய புலநிதியா யொளிர்ந்ததிரு
நாரணப்பேர் விபுத ரேறே. (5)

63 சந்தமுறத் தமிழ்பரப்பும் பத்திரிகைப்
பெருங்குழுவிற் றலைமை தாங்கிச்
செந்தமிழா மரக்கலத்தைத் திறமமைந்த
மாலுமியென் றியம்பும் வண்ணம்
அந்தணநீ யறிவாழி தனிற்செலுத்திப்
புகழுடலை யடைந்து நின்றாய்
விந்தையிது வணிகர்தொழில் முன்னாளில்
அந்தணர்க்கு விதித்த துண்டோ. (6)

64 கற்பகமென் றுனைப்புகழ்ந்து களித்துமகிழ்
மாணவரைக் கண்டேன் வீயா
வற்பகத்துக் கொண்டறிவுச் சுடர்கொளுத்தும்
நின்னாற்றல் அறையக் கேட்டேன்
தற்பமிலாய் கசடறநூல் தமைக்கற்றாய்
பிறர்க்குதவித் தகவி னின்றாய்
நற்பனவ வுயர்திருநா ராயணப்பேர்
மருவிநின்ற நாவல் லோனே. (7)

65 இனித்தருக்க முறையிலெழூந் தின்பூட்டுங்
கட்டுரைகட் கிடனு முண்டோ
நனித்தநுழை புலத்தாய்ந்து திட்டுபத
சாரமினித் தோன்றுங் கொல்லோ
மனித்தர்குழு வினிலறிவால் மகிபனென
நனிதிகழ்ந்த மறையோ யென்று
பனித்தவிழி கொளப்புலவர் உயர்திருநா
ரணன்விண்பாற் படர்ந்தான் மன்னே. (8)

66 பொருவாரில் சேடனென வுயர்திருநா
ராயணப்பேர் புனைந்த செல்வா
பெருவானிற் கிறைவனவைக் களத்தையலங்
கரிக்கவெனப் பெயர்ந்தாய் கொல்லோ
மருவாரும் விரும்பவுரை வகுக்கவலாய்
சூரிகள்நல் வரவு கூறத்
திருவாரு மலர்மார்ப னறிதுயில்கொள்
சேக்கையிடம் சேர்ந்தாய் கொல்லோ. (9)

அண்ணுமலைபல்கலைக்கழகத்துத் தமிழ்விரிவுரையாளர்
வித்துவான். திரு. A. பூவராகம்பிள்ளையவர்கள் இயற்றியவை.

67 உலகு புகழ்மதுரை யுற்றதமிழ்ச் சங்கத்
திலகுதிரு நாரா யணனார்—நலமிகும்
இன்பமே யான எழில்வா னுலகடைந்தார்
அன்பர் உளமகிழ ஆங்கு. (1)

68 செந்தமிழ் ஆழி திளைத்து வடமொழியும்
முந்துறவே கற்றுணர்ந்த மூதறிவால்—முந்துநூல்
தாமாய்ந் தளித்த தகைமாண் பொருளினியே
நாமா ரிடம்பெறுவேம் நன்கு. (2)

தருமபுர ஆதீனத்துக் கீழ்த்திசைக்கலைக்கழகக்கல்லூரித்

தலைமைத்தமிழாசிரியர்

திரு. பு. சி. புன்னைவனநாதமுதலியாரவர்கள் இயற்றியவை.

69 ஓங்கிரு முந்நீ ராடை யுடுத்தநா னிலம டந்தை
தாங்குமை யறிவி னோடு சார்பகுத் தறிவா றாகப்
பாங்குட னெழுநாக் கொண்டே பகரெட்டுத் திக்கு ளோருந்
தீங்குர லமுத மாரச் செய்நவ நார னாகேள்.* (1)

70 நண்ணுநாற் பதினாண் டின்முன் நற்றமிழ் பயில்வான் சங்கம்
கண்ணுறு வேலை ஓர்பாக் கழறுதி யென்னக் கிட்டாப்
பண்ணிய சிவப்ர காசப் பாவலன் பாட்டொன் றோதப்
புண்ணிய பூபன் பாண்டித் துரைமொழி போற்றிச் சேர்த்தாய். (2)

71 சேர்ந்துசெந் தமிழீ ராண்டு செந்தமிழ்க் கோபா லையர்
ஆர்ந்தமா ணிக்க வேள்என் ஆசிரி யர்பால் அன்பு
கூர்ந்துசெந் தமிழ்கற் றேனைக் குணக்கட லாய நீதான்
ஆர்ந்தசொல் லமுதச் சீரால் அழகையா சானாச் சேர்த்தாய். (3)

72 அழகைப் பதியில் ஓரைந்தாண் டாசா னாக அமர்நாளில்
பழகும் பெரிய ராகவரும் பண்பார் பாண்டித் துரையும்எழிற்
குழகன் தமிழிற் குருவாகிக் குறையே கூறா வணங்கொடுத்தார்
அழவே தொலையா தன்னோரின் பிரிவா லாகு மருந்துயரே. (4)

73 அருமை நெல்லை இந்துகலா சாலை யமர்ந்தே ஆசிரியப்
பெருமை முதிர மதுரையிற்சீர் பிறங்கு சௌராட் டிரப்பள்ளி
உரிமைத் தலைமைத் தமிழாசான் உழைப்பி லொருபத் தாண்டான
திருமை யின்ப மெய்துறவே யெழுநாட் டாளோ டொருமதித்தாள். (5)

74 தாளாண் மைப்பேர் வேளாளர் சங்கந் தமிழ்ப்பண் டிதர்சங்கம்
நாளாற் றொடங்கி வள்ளுவர்நூற் பரிசும் வழங்கி நல்லறிஞர்
வாளா காலம் போக்காதே வாய்க்கும் பொழுதெல் லாம்பெருஞ்சொல்
நாளா ரம்பஞ் செய்வித்த நல்முன் னாலே நாரணனே. (6)

---

* இதனுள் 2 முதல் 9 இறுதியாகவுள்ள எண்கள் தொனிக்கின்றமை காண்க.

75 செய்ய தமிழ்ச்சங் கத்திடையே திகழ்ந்த தொல்காப் பியநூலும்
உய்யும் வழியிற் பயில்வார்கட் குதவா திருந்த தோர்ந்துனி
ஐய உன்சீர் அருட்டுணையா லன்றோ மூலம் வெளிவந்த
தெய்யு மிதனை அறிவித்தா யென்பாற் கொளுநல் லன்பாலே. (7)

76 அண்ணா மலைபல் கலைக்கழகந் தமைந்த முதற்றேர் வுக்குழுவிற்
கண்ணா மிருவ ருன்மாணாக் கர்தாம் விளங்கிக் கவின்செய்தார்
எண்ணா மைவர் ஏய்ந்தக்கால் எம்மோ டிருந்துஞ் சிறப்பளித்தாய்
எண்ணா ரிகலுங் குணச்சிறப்பால் எளிதில் வெல்லும் இனியவனே. (8)

77 நெல்லையிலும் பாளையிலும் நிகழெழுமூன் றாண்டுமிஷன் சாலை நேர்ந்தே
ஒல்லும்வகை தமிழ்ப்பயிரை ஓம்பிவளர்த் தேபின்னர் ஓய்வு முற்று
நல்லதிருச் சூசையப்பர் கல்லூரி தனிலுமிராண் டுழைத்தே நற்பேர்
சொல்லுதமிழ்த்தருமையுயர்கல்லூரித்தொண்டுநலந்தோன் றச்செய்வன். ()

78 தருமச்சக் கரந்திகழ்நாள் தனைக்கேட்டுங் காணாத தகைமை யென்னீ
தருமச்சக் கரன்தாளைச் சார்ந்தனைபன் மூன்றாடி தன்னிற் செவ்வாய்
தருமச்சந் தவிர்புலமை தாங்குமப்பன் தளராதே வாழ்விற் சீர்த்தான்
தருமச்சந் தியென்றுந் தழைத்திடநின் தாள்பரவல் தருமே தக்காய்!

தருமபுர ஆதீனவித்வான் திரு. "பாலகவி"
வயிநாகரம். வே. இராமநாதன்செட்டியாரவர்கள் இயற்றியது.

79 அந்தோ தமிழுக் கருங்கலத்தை யாமிழந்தோம்
செந்தா மரைக்கண்ணன் சேவடியில்—முந்தார்வம்
நன்றுகொடு செந்தமிழ்ப்பேர் நாராயணப் புலவன்
இன்றுயிரீந் தானோவி தென்.

புதுக்கோட்டை மஹாராஜாகலலூரித் தமிழ்விரிவுரையாளர் பண்டிதர்
திரு. நா. கனகராஜையரவர்கள் இயற்றியவை.

80 ஆழ்ந்தகன்ற நுண்புலமை அடைந்தசிரு
ருளம்புகுதும் அருஞ்சொல் வன்மை
போழ்ந்தபகை தலைதூக்கும் வாதநெறி
புகுந்திடினும் பொறுமை வாய்மை
தாழ்ந்தவரை யுயர்ந்தவர்போ லாதரிக்கும்
பெருந்தகைமை தமிழின் செல்வம்
வாழ்ந்ததிருக் கோயில்திரு நாரணவாரிய!
தமிழை மறந்த தேனே. (1)

81 பரமபத வாழ்வுபெறு நித்தியசூ
ரிகள்பயிலாப் பழமை சான்ற
வரமமைந்த தமிழ்த்துறையின் நுட்பமெலா
மவர்செவிக்கே வழங்கு மாறு
சிரமசைய வுளமுருக வுயோ குதுயின்
மறந்தரியே சேட னேடும்
பாவமுதா மினியதமிழ் கேட்கவெ... று
நாரணவிண் படர்ந்தாய் நீயே. (2)

82 தவத்திறமே பூண்டுமணி மேகலையாங்
கணிகைமுன்பு தருமங் கேட்ட
சிவக்கதையின் பொருள்விளங்காக் குறைதெளிந்து
தமிழருக்கே தெளிவு செய்வான்
உவப்புவெறுப் பிலாதவர்கள் மனமாரப்
பாராட்டும் உரையொன் றூற்றி
நவப்பணியாத் தமிழ்மகட்குப் பூட்டுதிரு
நாரணநீ நடந்த தியாண்டே. (3)

83 கொழுச்சென்ற வழிநுழைந்து துன்னூசி
யினிதுசெல்லும் குறிப்பைப் பற்றி
வழுச்சென்ற வழியெல்லாம் பொருள்புகன்ற
புலவர்குழு மயக்கம் தீர

விழுச்செல்வர் மீனாட்சி சுந்தரனா
வலர்வாக்கின் விளக்கம் காட்டி
உழுச்செல்லும் கொழுத்தாங்குந் துன்னூசி
யெனத்தெளிய வுரைத்திட் டாயால். (4)

84 வடமொழியிற் பெரும்புலவர் மதிக்குமொரு
பெருநூலாய் வழங்கா நின்ற
மடமகல வருநியாயப் பிரவேசம்
நுவல்பொருளும் வணிகன் சாத்தன்
இடமகல்தன் செய்யுளகத் திட்டுவைத்த
நுண்பொருளும் இனிது காட்டும்
திடமுளனூ லியற்றுதிரு நாரணநீ
யும்பருக்கும் செப்பு வாயோ. (5)

85 ஒருபனுவற் பொருள்விளக்க வொருநூலே
யியற்றுவதற் குரிமை பூண்டாய்
தருபனுவற் பொருள்கேட்கு மாணவகர்
மனங்களிப்பத் தருதல் செய்வாய்
வருபனுவற் பொருள்தெளிய மொழிநூலின்
வகைமையெலாம் வகுத்து வைப்பாய்
குருபாசற் குணமணியே யினியுனைப்போ
லொருவருண்டோ குவல யத்தே. (6)

86 இனியமொழி பணிவுபெற விசைப்பதன்றி
வன்சொலென்றும் இசைத்தல் செய்யாத்
தனிமகிமை யுடையபெருந் தகையாள
தமிழ்க்கடலின் தகைசால் மத்தே
இனியெவரை யுனைப்போல வாசிரிய
ரெனயாங்கள் இசைத்தல் செய்வேம்
மனிதரிலாப் பெருநிலத்தே யாசிரிய
நலம்பெறவோ வான்சென் றூயே. (7)

87 ஆண்டு சருவசித்தே ஆடித் திருமதியே
யீண்டு வெளியபக்கத் தீராறே—நீண்டபுகழ்ச்
செவ்வாயே நீயிர் திருநாரண குருவை
எவ்வாறு வானழைத்தீ ரே. (8)

கல்லல்நகர்ச் சாதுக்கள்மடாலயத்தலைவர்

உயர்திரு. பண்டித. சி. த. நாராயணசாமியாரவர்கள்இயற்றியவை.

பாட்டெண் 88—92.

அந்தோவிவ் வுலகநிலை யறக்கொடிதே யான்றேரு மறைய லாமோ
நொந்தேயா மயங்கிவிழ நுவலாம விருந்தாற்போல் நுணுக்கஞ் சான்ற
எந்தேவே! நாரணனே! எழிற்கலைஞ! தமிழ்க்கடலே! இயலுஞ் சங்கச்
சிந்தாதே வியுமறுக யாங்ககன்ருய் தண்ணளியின் றிறமீ தாமோ. (1)

வள்ளுவர்நூற் கருத்தறிய வடித்துரைக்கும் பெருமானே! வடநூ லாய்ந்து
தெள்ளுதமிழ்ப்பொருளனைத்துந்தெரித்துரைக்குமொருபுலவ!தேர்மாணுக்கர்
கொள்ளும்வகைமகிழ்ச்சியொடுகொடுத்தருளுங்கலைவாணர்கோவே!மின்வாய்
விள்ளுமொழிபோன்மொழியையாங்கடைந்துசெவிமடுப்போம்விதியுநன்றே.

கலக்கமற முகமலர்ந்து கருணைவிழி பொழியநிதங் கற்போர் யார்க்கும்
இலக்கணநூ லுணர்த்துகினும் இறைநிலையும் நுனித்துணர வியல்பதாக
அலக்கணற வுரைத்திடுவாய் அங்ஙனம்யா ருரைப்பரையா! அவனி மேய
நலக்கடலே குணக்குன்றே நாரணனே ஆரணவாய் நவிலுந் தேவே. (3)

கும்பனைத்தொல் காப்பியனைக் கோச்சேனு வரையனையோ கொழித்த கல்விக்
கம்பனையும் நிகர்த்துநின்ற கலைக்கடலே! அமிழ்தனையாய்! கரிய மேனி
நம்பனரு கிருந்தின்பம் நனிபருகும் பெரியவர்தம் நாப்ப ணூர
அம்புவிவிட் டனையெனினும் அளவறுமெர் துயரறியா தகற னன்றே. (4)

என்றுனையான் கூடலிலே யினியடைந்தே ஐயமெலா மேக ஐயோ
நன்றுநின்று வினவிடுவேன் நானறிய வுரைத்திடுவாய் நாத இங்கு
நின்றனையான் அடைந்தடைந்த மகிழ்வனைத்தும் வீணுக நிலையா தேகச்
சென்றனையேஇதுதகுமோசிறுமையுற்றேன்என்புரிவேன்திகைக்கின்றேனே

இராமநாதபுரம் இராஜாஸ் ஹைஸ்கூல் தமிழாசிரியர்
ஸ்ரீ. ஜெ. நாராயணசுந்தரம் ஐயங்காரவர்கள் இயற்றியவை.

93 எந்தாய் எனின்மற்று மெண்ணில்புல வோர்தமக்குத்
தந்தாய் தமிழ்ச்செல்வம் தந்தாய் தனிச்சுடராம்
சிந்தா விளக்கே திருநாரண மறைந்து
சிந்தா குலம்தந்தாய் என்னோ செயலிதுவே. (1)

94 உன்மரபி னோரெல்லாம் உன்னால் தமிழ்நிறைந்தார்
பன்மைதரு மாணவரிப் பாரெங்கும் நீயளித்தாய்
மன்மருவு மின்னதமிழ் வான்குலத்து மூதாதை
யென்மருவு சீராளா எங்குற்றாய் நாரணவோ. (2)

95 ஆதி யகத்தியனே ராசிரியனா நின்பால்
ஓதினா ரெம்மருங்கு மோங்குதமிழ்த் தொண்டாற்றத்
தீதில் கலைவளர்சீர்த் தென்மதுரைச் சங்கமுதற்
கோதில் புலவனெனக் கூடிநின்றாய் நாரணவோ. (3)

96 ஆகம் தளர்ந்தாய் அறிவு தளராய்நாப்
போகம் தளர்ந்தாய் பொருளுரைக்கும் சீர்தளராய்
வேகம் தளர்ந்தாய் விழையறத்தா றிற்றளராய்
நாகம் தளர்வலிகூர் நாரணவோ நாரணவோ. (4)

97 பாண்டித் துரைவைத்த பாரம் பொறுத்ததுவே
வேண்டிப் பிறிதொன்றும் வேண்டா தியல்காறும்
ஈண்டிக் கடனாற்றி எங்நா ரணவுலகைத்
தாண்டிக் கடந்தாயாற் சால்கபிலன் போல்மறையாய். (5)

98 இன்னா வுலகமிதா மீங்கிருக்க வொண்ணாதால்
என்னா இவண்விட்டே யேகினையோ பின்னாளில்
முன்னாளின் வள்ளியோர் முற்புலவர் பாலுற்ற
நன்னாரி னட்பு நலங்கண்ட நாரணவோ. (6)

99 எத்தனையும் பொருளறியா திருந்தனவும் ஈங்கறிய
வைத்தனைசெந் தமிழென்னும் வான்பொருட்சஞ் சிகையளித்தாய்
இத்தனையோ இன்னும் எனைப்பலநீ செய்பணிகள்
அத்தனையும் ஆகுலநீ ராகாபொன் னாரணவோ. (7)

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்

100 பெருநா வலநினது பெருமை பெரிதாங்கென்
குருநாயக வென்பாற் கூர்சிறுமை யும்பெரிதால்
ஒருநா ளெளிமை யொருவா துவந்துறவாய்
திருநா ரணனேயென் திருநா ரணனேயோ. (8)

101 என்கோவைப் பாடலிருநூற் றிரட்டியுங் கேட்
டுன்கோதி லாத வுயர்மதியி னாராய்ந்து
நன்கோவை யென்னநலம் பாராட்டி நற்பாடல்
இன்கோல மார்பா யிரந்தந்தாய் நாரணவோ. (9)

102 நீயிருக்கு மாமதுரை நித்தியமாந் தேவருல
காயிருக்கு மெற்கதனு லாங்கிருக்க யான்விழைவேன்
சேயிருக்கு மாலுலகு சேர்திருநா ராயணநின்
வாயிருக்கு மின்சொல் வளமிருக்கக் காண்பதென்றே. (10)

103 தென்சொற் கடந்துவட சொற்கடற்குத் தேர்ந்தெல்லை
நன்சொற்க டந்ததிரு நாரணனென்—மன்சொற்
சருவசித்து நாமஞ் சருவசித்தா மாண்டில்
உருவசித்து நீத்தான் உவந்து. (11)

இராமநாதபுரம் ராஜாஸ்ஹைஸ்கூல் தமிழாசிரியர்

வித்வான் திரு. ரா. இராமாநுஜையங்கர்அவர்கள் இயற்றியவை.

104 தாரகமும் போடகமுஞ் சார்ந்தபல போக்கியமுஞ்
சேரகங்கூ டற்சங்கச் சேவையென—நேரகங்கொள்
நாரா யணமாலே நாடியுற்ற விண்ணகத்துச்
சீராய சேவையெது செப்பு. (1)

105 பொங்குதமிழ்க் கொப்போவப் புத்தே ளழுதுதமிழ்ச்
சங்கமதற் கொப்போவிண் சார்சங்கம்—இங்கறிஞர்
சேரின்புக் கொப்போ திவியின்பு நாரணனே
பாரின்பு கண்டாய் பகர். (2)

106 போதித்த லுண்டோ புலங்கொளவேற் பாருண்டோ
வாதித்த லுண்டோ வகைவகையாச்—சோதிக்கும்
பன்னூல்க ளுண்டோ பாகதியி னாரணனே
நன்னூல்க டந்தாய் நவில். (3)

107 நீர்தண் டமிழ்நினைவாய் தேகமூப் பேநினையாய்
சார்தம் நினைவாய் தடைநினையாய்—ஏந்துதமிழ்ச்
சங்கம் நினைவாய் தழுவுமிசை தானினையாய்
எங்கடிரு நாரணனே யிங்கு. (4)

108 ஆரியமுஞ் செந்தமிழு மாழ்சமய தத்துவமுஞ்
சீரியசீ டர்க்குத் தெருட்டுவதே—பாரிலுயர்
தன்பாக் கியமாத் தழுவுதிரு நாரணனுக்
கன்பாக்குங் கைம்மாறி யாது. (5)

109 தோலாத வாலறிவாற் றுன்னூல் பலவுரையின்
மேலார் விழைய வெளியிட்டு—நூலாயும்
கற்றுரைத் தோற்றிக் களிநா ரணன்றமிழுக்
குற்றுனென் றேது முலகு. (6)

110 பெருந்தமிழி னுட்பமெலாம் பேணத் தெருட்டி
யருந்தமிழ்திற் றீஞ்சுவையை யள்ளித்—தருந்தொழும்பி
னுண்டா யினர்புலவ ரோங்குதிரு நாரணனு
லெண்டாய பல்லோ ரிவண். (7)

111 கல்லார் பலர்பிரிந்த நானிலத்தில் வாழ்தலினி
யொல்லா தெனவா னுகந்தனையோ—எல்லாய்
விளங்குதிரு நாரணனும் மேதினியிற் கல்வி
வளந்தருவா ராருனைப்போல் மற்று. (8)

112 ஆசான் பிரிவி லழுதார் பலசீடர்
மாசான தென்றழுதார் மாநிலத்தோர்—தேசார்
இமிழ்வான் புகுந்த விசைநா ரணற்குத்
தமிழ்மா தழுதாள் தணந்து. (9)

113 ஒப்பா ரிலாத வுயர்குணத்தோ யுன்னைவிழைந்
தப்பா வெனவழைக்கு மப்பற்கே—இப்பாரிற்
பன்னலங்க ளோங்கப் பணிநா ரணதமிழின்
மன்னலங் கார மகிழ்ந்து. (10)

வத்தலக்குண்டு போர்டுஹைஸ்கூல் வடமொழியாசிரியர்

வித்வான், சிரோமணி, ஸ்ரீ. V. N. ஸ்ரீராமதேசிகாசாரியர்ஸ்வாமி

இயற்றியவை.

பாட்டெண் 114—126.

புவிக்கணியாம் பாண்டிநன்னாட் டெதிர்க்கோட்டை நகர்ப் பிறந்த புனித! என்றும், செவிக்கினிய செஞ்சொல்லாம் அமுதார வுண்டின்பம் திளைத்த தீர!, கவிக்கரசே! கலைக்கடலே! உவர்க்கட னீத் தெழுகின்ற கதிரே போல்வாய்!, தவக்குரிசில்! திருநாரா யணப்பெரியோய்! தனிவானிற் சார்ந்திட் டாயோ. (1)

ப்ராஜ்ஞாதிதிவ்யகவிஜந்மவிபூஷணஸ்ய
ஜஜ்ஞே ஹி வைதிகமஹாந்வயஸம்ப்ரஸூத: ।
ஶாஸ்த்ராதிஸர்வகுணயாமமஹாவிபூதிர்
நாராயணார்யவிபுத: ஸ்வர்கதோ(அ)த்ய ஹந்த ॥

எல்லையற்ற கலைகளெலாம் இனியதமி ழாரியமென் றிவற்றிற் றேர்ந்து, சொல்லவொண்ணு மேதையுடன் சொல்வலவர் வியப் பெய்தித் துதிப்ப நாளும், சொல்லருஞ்சீர்ப் பரிமுகன்ற னவதார மெனவுலகு சொல்ல நின்றாய்!, எல்லையில்சீர்த் திருநாரா யணப் பெரியோய்! எழிற்பதமே எய்திட் டாயோ. (2)

ஶ்ரீவைஷ்ணவஶாஸ்த்ரநிவஹே நிஶிதாம் மநீஷாம்
வ்யாக்யாத்ருதாம் ஶ்ருதிஶிரஸ்ஸூக்திஷு ஶேமுஷீம் ச ।
ஸர்வாத்மநா ஸ்வவஶவர்த்திநீம் ந வஶம் ஸதாம் யோ
நாராயணார்யவிபுத: ஸ்வர்கதோ(அ)த்ய ஹந்த ॥

சாத்திரங்கள் எடுத்தியம்பும் புலனடக்கம் முதலான தகவு
வாய்ந்திங், காத்திகர்கட் கெடுத்துக்காட் டாய்விளங்கு பெருந்த
கையே! அந்த ணாள!, நேத்திரமாம் உபயமறை முடிவுமறிந் தந்
நெறிசேர் நிகரி லாதாய்!, சீர்த்திரள்சேர் திருநாரா யணப்பெரி
யோய்! சேணுயர்வான் சேர்ந்திட் டாயோ. (3)

ஶாஸ்த்ரம் ச நீக்ஷிகிமிஷம் விஹிதம் ஸசாஸ்த்ரம்
ஶாஸ்த்ரேஷு கிம் ச திவஸே ததி ஶ்ருதிஶேஷ ஸூரிபி: ।
ஶாஸ்த்ரார்த தத்த்வஸஹஜாவதி ஹீநயா ச
நாராயணார்ய விபுதோ நிதராம் வஶாதே ॥

அலைகடல்சூ ழவனிமன்னன் மகன்முனைநாட் பாரதநா
டடைந்த காலை, நலமிகுமவ் வரவதனைக் கொண்டாடும் அரசிய
லார் நன்கா ராய்ந்து, கலையுததி கடந்துநின்ற திருநாரா யணப்
பெரியோய்! கணிசித் துன்னைத், தலையறுநற் சம்மானம் அளித்து
நினக் கவர்கள்புகழ் தோய்ந்திட் டாரே. (4)

ப்ரஜ்ஞாவிஶேஷசதுரம் ப்ரஸமீக்ஷ்ய காலே
ஸம்ஸ்க்ருதிவாண்யபிவர்த்திஷு ராஜகீயா: ।
ராஜாதிராஜதநயாபவநப்ரஸம்ஸே
ஸம்மாநநேந ந்யதுரவாபகோஷமாஸ்யே ॥

தன்னயமே கருதாத திருநாரா யணப்பெரியோய்! சால்பு மிக்
கோய்!, நன்னலமார் மதுரைநகர்த் தேசிகநற் சபைநடுவே நாவல்
லோர்முன், மன்னுபுகழ்ச் ‘சீரொன்று தூப்பு’ லெனும் தனிய
னுரை மகிழ்மீ தூரத், துன்னியபே ரவையினர்தம் மேனியெ
லாம் புளகமெழச் சொன்னாய் மன்னே. (5)

ஶ்ரீதேஶிகாப்யுதயமஹோத்ஸவஹர்ஷஸம்ஸதி
ஶ்ரீதேஶிகஸ்தவநிதர்ஶநவாக்யஸக்தை: ।
ஶ்ரீமாநயம் வ்யரசயந்நநு தீம் ஸ்துதிம் காம்
சூர்ணஸ்ய யாம் வ்யாக்ருதிதா ஸஹ்ருதயா: ஸஹர்ஷா: ॥

உன்பெருமை யுன்னியுயர் மாண்புமிகு சேதுமன்னன் உளம் உவந்தே, அன்பொடுநற் றமிழ்ச்சங்கக் கலைக்கழகத் தலைமை நினக் களித்த தாய்ந்து, மன்புகழ்சேர் திருநாராயணப்பெரியோய்! நீ அதனை மகிழ்வொ டேற்று, நின்பரமாக் கொண்டுபல மாண வர்க்குத் தமிழ்க்கல்வி நிறைவித் தாயே. (6)

𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌵𑌿𑌯𑌾𑌪 𑌸𑌹𑌜𑌾𑌂 𑌵𑌚𑌸𑌾𑌮𑌸𑍀𑌮𑌾𑌂
𑌮𑌾𑌨𑍍𑌯𑍇𑌨 𑌸𑍇𑌤𑍁𑌪𑌤𑌿𑌨𑌾 𑌬𑌹𑍁𑌮𑌾𑌨𑍍𑌯𑌦𑌤𑍍𑌤𑌾𑌮𑍍 ।
𑌅𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌲𑌸𑌦𑍍𑌵𑌕𑌲𑌾𑌪𑌸𑍍𑌯
𑌵𑌿𑌦𑍍𑌵𑌤𑍍𑌸𑍍𑌵𑌕𑍋𑌷𑌹𑌿𑌤𑌮𑍋𑌦𑌨𑍁𑌤𑍇 𑌸𑍍𑌮 𑌹𑌰𑍍𑌷𑌃 ॥

பன்னருஞ்சீர் வேதாந்த தேசிகர்தாம் உலகமுய்யப் பணித்த நூலுள், முன்னணியி னின்றிலகுந் தேசிகநற் பிரபந்தம் முழுதும் ஆய்ந்து, பன்னலங்கொள் பெரியர்பலர் உதவிடயா னுரைவ ரைந்து பதித்த காலை, மன்னுபுகழ்த் திருநாராயணப்பெரியோய்! நின்னுதவி மறக்கற் பாற்றோ. (7)

𑌯𑌾𑌸𑍇𑌨 𑌪𑍂𑌰𑍍𑌵𑌗𑍁𑌰𑍁𑌣𑌾 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌸𑍂𑌰𑍇𑌃
𑌦𑌿𑌵𑍍𑌯𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑌵𑌿𑌵𑍃𑌤𑍌 𑌪𑍍𑌰𑌕𑌟𑍀𑌕𑍃𑌤𑌾𑌯𑌾𑌮𑍍 ।
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌰𑍍𑌯𑌵𑌿𑌹𑌿𑌤𑍋𑌪𑌕𑍃𑌤𑌿𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾 𑌤𑍇
𑌵𑌾𑌚𑌾𑌮𑌹𑌂 𑌸𑌮𑌹𑌵𑌂 𑌹𑍃𑌦𑌯𑌙𑍍𑌗𑌮𑍈𑌵 ॥

அன்றொருநா ளரணியஞ்சேர் பரதாழ்வான் பெரும்படைகட் களவில் பண்பாங், குன்றெனவாழ் பரத்வாச னறுசுவைசே ருண் டினி கொடுத்தா னென்பர், இன்றவன்றன் வழிவரும்நீ யுலகை மெலாம் உவகையுட னின்பம் எய்த, என்றுமழி யாக்கலையாம் விருந்தளித்தங் கவனினுஞ்சி றிசைந்தா யன்றோ! (8)

𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌯𑌥𑌾 𑌸 𑌮𑍁𑌨𑌿𑌰𑍁𑌗𑍍𑌰𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌂
𑌚𑌮𑍂𑌂 𑌵𑌨𑍇 𑌹𑌿 𑌭𑌰𑌤𑌸𑍍𑌯 𑌤𑌦𑌨𑍍𑌵𑌯𑍋𑌤𑍍𑌥𑌃 ।
𑌤𑌦𑍍𑌵𑌦𑍍𑌭𑌵𑌾𑌨𑍍 𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌲𑌸𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌣𑍇𑌷𑍁 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑌂 𑌤𑌰𑍍𑌷𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍋𑌧𑌨𑍈𑌵 ॥

குடமுனிவன் மொழியிலிலக் கணவிலக்கி யங்களெனக் குழுமி நிற்கும், கடலதனின் மிகப்பெரிய நூல்களிலே யெழுமையந் தீர்த்துக் காக்கத், திடமுறுநன் னெஞ்சுடைய திருநாரா யணப்பெரியோய்! உன்னையன்றி, இடமகன்ற இவ்வுலகில் யாவருளர் சிந்தித் தெற் கியம்பு வாயே. (9)

கூமஸ்தவா ஜயிதவுக்ஷணவுக்ஷ்யா பிவ
 ஜ நூா நவஷ்நி விஶயாநு ஷவஹாஜ்ஷசெவ ।
கொஃநு: க்ஷணெ ஹவி நிவதயிதம் விவஷ்
 ஜாராயணாய ஸாகவள திஜிவம் வ்யாதெ ॥

உலகின்மிசை மனமுவப்பத் தலைக்கூடி யுள்ளும்வகை பிரித லன்றோ, புலவர்தொழி லெனப்பொய்யா மொழிபுகலும் திருநாரா யணப்பேர் பூண்டாய்!, சலமிலுளத் தோடெமது மருணீக்கி மகிழ்வித்துச் சார்ந்த நீயாம், அலமரச்செய் தின்றுபிரிந் தமரருல கெய்துவது மழகி தாமோ? (10)

விஜ்ஜநஹ்ருதிராவுஜநம் ஷஸம
 ஹ்ருஷ்டம் வியாய தத கூதவியொஜநம் வ
உத்யாஹ ஜெவகவிரெதஃவெவிதக்ஷம்
 நாராயணாயவிஜஷி திஜிவம் வ்யாதெ ॥

விண்ணுலகின் மாமணிசேர் மண்டபத்து வீற்றிருக்கும் விபுதர் கோமான், பண்ணமரும் மறைகொண்டு நித்தியரும் முத்தருமே தன்னைப் பாட, நண்ணுமனத் திருத்தியுறு தெங்கள்திரு நாரணனே யுன்னை நாடி, விண்ணுலக மெய்துவித்துப் பிணை கொடுத்தும் விடகில்லா விழைவுற்றானே. (11)

களஷீதகீ ஶ தஃஹாஃணிஃணவஷ:
 ஸ்ரீவாஸஜெவ உரமாயிவதள நிஷண்ண: ।
ஸம்வ்யாதிஜெநஹி ததவஃ வ நித்யஜெகெ
 நாராயணாயஃநயஷ்யஷித: ஷயாஃ ॥

பிறந்தவர்க்குத் துஞ்சுதலு மியற்கையென வுயர்ஙிதை பேசு மேனும், அறந்தழைக்க அவதரித்த திருநாரா யணப்பெயர்கொள் அண்ணல்! எம்பால், மறந்தவிர்த்த நினைப்பிரிந்து தாயிழந்த கன்றெனவே வருந்து மெங்கள், திறந்தெரிந்தெம் மனமமைதி யுறும்வண்ணம் உயரருள்நீ செய்க மாதோ. (12)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

விண்ணகரிற் பிறந்துநற்பல் கலைக்கடலைக் கடந்துபுலன் வென்று நற்பேர், மண்ணுலகிற் பெற்றொளிரும் வங்கிபுர நவநீதக் கண்ணனுசான், திண்மகனும் சீடனுமாம் சீராம தேசிகன்றான் சிறந்த செஞ்சொல், வண்மைமிகு திருநாரா யணற்பிரிந்து வருந்தி யிதை வகுத்தான் மன்னே. (13)

[illegible]
[illegible]
[illegible]
நாராயணாய விரஹேண விஷண்ணசேதா: ॥

மதுரை செண்ட்ஜோஸப்ஹைஸ்கூல் தலைமைத்தமிழாசிரியர்
வித்வான் திரு. S. ஆழ்வாரையங்காரவர்கள் இயற்றியவை.

127 துங்கமிகு மெதிர்க்கோட்டை மாநகரந்
துலங்கவவ தரித்த ஆயோய்!
பொங்குபுகழ்க் கூடல்வளர் தமிழ்ச்சங்கக்
கலாசாலை பொலிய மேன்மை
தங்குபே ராசிரியத் தலைமைபூண்
டெம்போல்வார் தமிழ்நூல் கற்றே
யிங்கனுயர்ந் திடவருள்செய் எழிற்றிருநா
ராயணநீ யெங்குற் றாயே. (1)

128 சுற்றமெலாம் பரிதவிக்கச் சொல்லவொணுப்
பெருந்துயர்நற் சுதனீங் கெய்தக்
கற்றபெரும் புலவரெலாங் கரைகாணுத்
துயர்க்கடலிற் கலங்கி வீழச்
செற்றமிலாய்! திருநாரா யணப்பெரியோய்
தேவருக்குஞ் செழுந்த மிழ்ச்சீர்
அற்றமின்றிப் போதிக்க வைகுந்த
மாநகர மடைந்தாய் கொல்லோ. (2)

129 வாவென்னப் பேரன்பான் மகிழ்ந்தழைக்கும்
காரணநின் வாயெங்கோ மெய்த்
தேவென்னப் பொலிந்தெமக்குச் செந்தமிழ்ச்சீர்
எடுத்துரைக்குந் திருநா வெங்கோ
மேவென்னு ளமர்ந்தென்றும் விளங்குதிரு
மேனியெங்கோ! மிருதுாய் மைத்தாம்
பூவென்னப் பொலிவுமிகும் புரைதீரு
முகமெங்கோ! புகலு வாயே. (3)

130 பொறையடக்கம் எளிமையுயர் வாய்மையொடு
தூய்மையெலாம் பொருந்திச் சீலம்
நிறைபெரியோய் வடமொழிதென் மொழிக்கடலி
னிலேகண்டு நிதமு மாறன்
மறைமருவு மரும்பொருள்தேர்ந் துரைத்தெமையாள்
காரணனே மதிவல் லோனே
துறையமைந்த தமிழ்த் தாயைச் சோர்வுறவிட்
டெங்குற்ருய் சொல்லு வாயே. (4)

மாஜி பாலபாடசாலைப் பரிசோதகர்

ஸ்ரீ. வே. முத்துஸாமிஐயரவர்கள் M.A., L.T. இயற்றியவை.

131 என்னபுலம் என்னகலை என்னபொறை என்னநிறை
என்னபணி வென்ன எளிதகைமை—மன்என்றே
ஞாலம் பரவுதிரு நாராய ணப்பெரியோய்!
காலன் வயப்பட்டாய் காண். (1)

132 தென்மதுரைச் சங்ககலா சாலைக்கும் செந்தமிழ்க்கும்
தொன்மைதொட்டே ஆசானுத் தோன்றியவண்—பன்னுகல்வி
சீடருக்கும் ஏனோர்க்கும் தேற்றுவித்தாய் ஐயதிரு
நாடிருக்கச் சென்றதென்இந் நாள். (2)

133 அப்பனெனும் மைந்தற்கிங் காரக் கலைதெரித்தாய்
இப்புவியில் என்றும் இயற்றமிழைச்—செப்பினையால்
எல்லாக் கலைக்கும் இவன்பதம்சார் வென்றிசைந்தாய்
புல்லாணி மால்பதம்நீ புக்கு. (3)

134 தருக்கம் இலக்கணம் சார்வைண வத்தின்
பெருக்கப் பிரபந்தம் பீடார்—உருக்க
உரைக்கும் உயர்குறட்கும் உன்போன் றொருத்தர்
உரைக்கும் தரமோ வுலகு. (4)

135 அன்றுபிரிந் தோமந்தோ சாமிநா தாரியனைப்
பின்பிராக வற்பிரிந்து பேதுற்றோம்—இன்றோ
உனைப்பிரிந் தின்னல் உழக்கின்றேம் பண்டை
வினைப்பயனீ தெங்கள் விதி. (5)

136 வடமொழியிற் றென்மொழியில் வண்புலமை மிக்காய்
மடமொழியே தோய்க்கு வாய்ப்பா—இடமொழித்து
வைத்த புலவருயர் வானில்வர வேற்றனரோ
எய்த்தஇளைப் பாற்றி யினிது. (6)

137 பூதவுடல் நீத்தாய் புகழுடலிற் போந்துள்ளாய்
நீத மறைச்சான்றோய்! நீவிண்ணின்—மீதமர்ந்து
காணுக்கும் கண்போன்ற காதற் றமிழ்மகட்கும்
சீலமிக ஆசிநலம் செப்பு. (7)

மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலையின் பழையமாணவரும்
அத்தமிழ்ச்சங்கத்தின் மாஜி எழுத்தாளருமான
திரு. கோ. அப்பனையங்காரவர்கள் இயற்றியவை.

138 தடமதில் புடைசூழ் தண்ணெதிர்க் கோட்டைத்
தனிநக ருறைமறை யோருள்
மடமறு மாசான் கழலிணைப் பத்தி
வளத்திரு மாளிகை யார்தம்
திடமிகு குடிக்கோர் மணிவிளக் கனையாய்!
சீர்த்திரு நாரண! தமிழ்க்குக்
குடமுனி யனையாய்! உனைத்தமி ழிழந்த
கொடுமைதான் கூறுதற் கெளிதோ. (1)

139 தென்னில மொழியும் வடமொழிக் கடலும்
தேர்ந்தொளிர் புலவரிற் சிறந்தாய்!
நன்னய மொழியே நவிலு நாராய
ணரிய! நான்மறை வல்லாய்
மன்னிய கல்வி மாணவர் களுக்கு
மாரிபோல் வழங்கிடும் வள்ளால்!
இந்நிலந் தனிற்பன் மாணவ ரிரங்க
விடுத்துநீ எங்குசென் றனையே. (2)

140 தவவுயர்ந்த புகழ்ப்பாண்டித் துரைபரசு நிறுவும்
தமிழ்ச்சங்கப் புலவருளே தலைவனென நின்றாய்!
நவநவமாப் பழந்தமிழ்நூல் நாளுளுந் தந்தாய்!
ஞானமனுட் டானமிவை நன்கமையப் பெற்றாய்
அவனிமகிழ் இளவரசு பரிசுதவப் பெற்றாய்!
அருந்தமிழ்க்கே யுழைத்தழிவில் புகழுடனும் பெற்றாய்
புவிதனிலே நினைப்போலத் தமிழ்தழையப் போற்றிப்
புரத்தல்கடன் எனவிரதம் பூண்டவரும் உண்டோ? (3)

யாழ்ப்பாணத்து வித்வான், ஸ்ரீ சி. கணேசையரவர்கள் இயற்றியவை.

141 மதுரையில் நான்காஞ் சங்கம் மருவிய புலவன் வாக்கிற்
சதுரன் நாராயணப்பேர் சாற்றுயர் குலத்தோன் யாரும்
துதிசெய்செந் தமிழென் றோதுந் தூயபத் திரம தற்கோ
ரதிபன்இத் தமிழ்நா டேங்க அருமுடல் விட்டான் அந்தோ. (1)

142 எண்டிசை யெங்கு நாரா யணப்பெய ரேற வைத்தோய்!
பண்டிதர் பலரை யாக்கிப் பைந்தமிழ் வளர்க்கச் செய்தாய்
கொண்டசெந் தமிழா மேட்டிற் குலவுபே றுரைகள் தந்தாய்
தண்டமிழ் நாடு நின்றன் தகைமையை மறக்கு மோதான். (2)

143 துங்கமார் ஆரியத்திற் றுகைபெறு றங்க மோடு
தங்குமா மறைக ளாதி தகைமையிற் கற்ற மேலோய்!
சங்கநூல் பிறவுங் கற்றுத் தமிழ்க்குமோர் வரம்பாய் நின்றாய்
யெங்கனே நின்னை நேர்வார் இயன்மொழிப் புலவர் அம்மா! (3)

144 தக்கமாண் டமிழின் செல்வன் சாமிநா தையன் போனான்
திக்கெலாம் புகழை நாட்டுஞ் சேதுரா கவனும் போனான்
மிக்கநா ராய ணப்பேர் வித்துவ மணியும் போனான்
புக்கதோ தமிழ்மொ ழிக்குப் புகன்மா பழியுங் காலம். (4)

மதுரை ஸௌராஷ்ட்ரகலாசாலைத் தலைமைத்தமிழாசிரியர்
வித்துவான் ஸ்ரீ. ரே. இராமையங்காரவர்கள் இயற்றியவை.

145 கல்லார்கள் பலர்வாழும் எதிர்க்கோட்டை
நகர்புரிநற் றவத்தால் தோன்றிச்
சொல்லாரும் புகழ்படைத்த சேதுபதி
முகவைநகர்த் தொன்னூல் கற்றுப்
பல்லாரும் பயன்பெறவே மதுரைநக
ரினிற்பாண்டித் துரைமுன் கண்ட
எல்லாருந் தமிழ்ச்சங்கத் திறைபுரிந்து
தமிழ்வளர்த்தாய்! எங்குற் றாயே. (1)

146 வடமொழிதென் மொழிகளினல் வரம்புகண்டு
சங்கவிலக் கியங்க ளோடு
திட்டமுடைய கம்பனுரை இராமகதைப்
பெருவெள்ளத் திளைத்துச் சீர்மால்

இடமொழியில் அன்புடையாழ் வார்களரு
ளிச்செயலில் ஈடுபட்டுக்
குடமுனியும் வியந்திடவே பன்னூறு
மாணவர்கள் குழும வாழ்ந்தாய். (2)

147 வள்ளுவர்செய் திருக்குறளின் நுண்பொருள்கள்
நின்போல்யார் வடித்துரைப்பார்?
தெள்ளுபரி மேலழகர் உரைநயங்கள்
எவர்தெரிந்து செப்ப வல்லார்?
வள்ளலே! இனியார்தொல் காப்பியமா
கடற்குளித்து மணிநிரைப்பார்?
அள்ளியள்ளித் தருக்கநூல் நுணுக்கங்கள்
எவரீவார்? அறைகுவாயே. (3)

148 வடமொழிதென் மொழிக்கடல்கள் வாய்மடுத்த
நாரணமா முகில்வந் தார்த்துத்
திடமுடைய தமிழ்ச்சங்கச் செழுங்குவட்டி
லினிதேறித் தீஞ்சொல் மாரி
இடமுடைய மாணவராம் ஏரிகுளம்
ஆறுநிறைத் தென்றும் பெய்தே
மடமொழியக் கலைப்பயிர்கள் வளர்த்தசெயற்
குளதோகைம் மாறு மற்றே! (4)

வேறு

149 பொருளலா எனையுமொரு பொருளாக ஏற்றருளித்
திருவுளத்திற் கனிவுமிகச் செந்தமிழைப் போதித்தாய்
அருள்மிகுந்த நாரணநின் னாதரவாற் புலமைதனிற்
கரையற்று விளங்குவோர் கடல்மணலிற் பலரன்றே. (5)

வெண்பா.

150 கல்விக் கடல்மன் கவின்குணக் குன்றுமன்
சொல்வித் தகன்நிகரில் தூயன்மன்—நல்ல
திருநா ரணப்பெரியோன் தெய்வநிலை யுற்றான்
பெருநா ரணன்பதமே பெற்று. (6)

151 சருவசித் தாடி தகுபதின் மூன்றில்
மருவுது வாதசிசேய் மூலம்—இரவு
திருநா ரணப்பெரியோன் செய்யபுகழ் வைத்துத்
திருநாடு சேர்ந்த தினம். 7)

மதுரை ஸேதுபதி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்
வித்வான் ஸ்ரீ E. G. நாராயணையங்காரவர்கள் இயற்றியவை.

152 தருமேவிய சேணுடூறு தகைசால்சுர குருவே
இருமாநில முற்றுனென எவரும்புகழ் புலவன்
உருமேறெதிர் வாதம்புரி உரகர்க்குயர் புனிதன்
திருநாரண நாமன்குரு திலகன்மறை வென்னே. (1)

வேறு

153 தொல்காப் பியமுதலாத் தொன்மையுடை
யிலக்கண நூற் றுறையின் மூழ்கி
ஒல்காத பெருஞ்சிறப்பி னுண்பொருளாம்
ஒண்மணிகள் ஒளிர வாங்கி
மல்காத மதியுடைய வறியவனும்
அடியேற்கும் வாரி யீந்தாய்
அல்காத புகழுடைய வள்ளால்!உன்
அருங்கொடைதான் அறையற் பாற்றே. (2)

154 அளப்பரிய குணக்கடலே! அறிஞர்குலத்
தனிச்சுடரே! அறைவ னேநின்
துளக்கரிய மனத்திட்பம் துன்னரிய
மதிநுட்பம் சொல்லின் ஒட்பம்
உளப்பண்பாம் உயர்தட்பம் உய்த்துணரும்
கலைச்சிற்பம் ஒழுக்கின் செப்பம்
குலப்பெருமை கிளத்துவனோ கொள்கைதனை
விளக்குவனோ கூறு வாயே. (3)

வெண்பா.

155 ஊக்கம் படைத்தான் ஒளிநிறுத்தான் இவ்வுலகில்
ஆக்கம் படைத்தான் அரியசெய்தான்—நோக்கிர்
திருநா ரணன்தான் திருநாடு பெற்றான்
திருமால் தமர்வாழ்த்தச் சென்று. (4)

மஹாவித்வான் மறைவு

தமிழ்கூறுநல்லுலகில் தென்திசைத்திலதமாய் விளங்கிச் சீரிய அரிய நற்றொண்டாற்றிப் புலவரேறாய்த்திகழ்ந்த மதுரைத்தமிழ்ச் சங்க மஹாவித்வான் திரு. நாராயணையங்கார்ஸ்வாமி, தமிழ்ப்பல்லாண்டிசையுடன்பாடி அந்தமில்பேரின்பத்து அடியரோடிருக்க உவந்து பேராவியற்கைப் புக்கில் புகுந்தமைகேட்டு இரண்டுகன்றினுக் கிரங்குமோராவென வாயினேம். பிரபந்நர்களை அங்குக்கூவிக் கொள்ளுவதினும் அவர்கள் அங்குப்போய்ப் பெறுவதெல்லாம் இங்கே பெற்று வாழும்படி அத்திருவுக்குந்திருவாகிய செல்வன் அநுக்ரஹித்திருப்பின் உலகிற்குச் சால நன்மைபயக்கும் எனச் சற்றேறக்குறைய முப்பது ஆண்டுகளாக அப்பேரறிவாளரின் அமுதமொழிகளைப் பருகியுளோர் கருதுவது உசிதமே. கல்வியிற் பெரிய கம்பநாட்டாழ்வான் இராமபிரானைக் குறிக்கையில், 'தென் சொற்கடந்தான் வடசொற்கடற் கெல்லை தேர்ந்தான்' எனப் பெருமிதத்துடன் கூறியது, நம் மஹாவித்வான்போன்றவர்களை இத் தமிழகத்தில் தான் கண்டதைக்கொண்டே எனல் மிகையாகாது. உபயகலைகளிலும் மஹாப்ரவீணராய்ச் சாந்தமூர்த்தியாய் அறநெறிச்செல்வராய் நிறைகுணத்தவராய் இன்சொல்லராய் வித்தகராய் விளங்கிய எம் குருமூர்த்தியை இனி எவண் காண்பேம்? அம்மஹாபுருஷனை என்றும் இவ்வுலகு மறவாது. இதனை முற்றுவிக்கும் வழி ஒன்றே. அது, அவர் புலவர்தலைவராயிருந்து நடாத்திவந்த "தமிழ்ச்சங்கமும்" "செந்தமிழும்" எக்காலத்தும் நிலைநின்று மேன்மேலும் நற்றொண்டாற்றிவருமாறு செய்வதே. அதனைச் செந்தமிழ்ச்செல்வர்கள் பூர்த்திசெய்து உலகின்புற வேண்டியனவற்றை 'வேண்டுதல் வேண்டாமையிலான்' நல்குவானாக. அம்மஹாவித்வானின் அந்தமில்சீர்த்தி வளர்க.

15, கணபதிமுதலிதெரு,
திருவல்லிக்கேணி,
8—8—1947.

ப. ரே. திருமலையையங்கார்.
காரியதரிசி.
திருவல்லிக்கேணித்தமிழ்ச்சங்கம்.

சுவாமி விபுலாநந்தர் மறைவு

தமிழ்வளர்த்த புலவருள் ஈழநாட்டினரும் பலர். அவருள் ஆங்கில மொழிப்புலமையொடு முத்தமிழ்ப்புலமையும் நிறைந்து வடமொழியறிவும் வாய்ந்து திகழ்ந்த உயர்திரு விபுலாநந்த அடிகளைத் தமிழுலகம் நன்கறியும். அடிகள் ஈழநாட்டிற் பிறந்தவராயினும், அவருடைய பலகலையறிவால் விளைந்த பயனனைத்தினையும் ஒருங்கெய்தியது தமிழ்நாடேயாகும். மயில்வாகனம் என்பது அடிகட்குப் பெற்றோர் சூட்டிய நாமம்.

இவர் மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பண்டிதபரீக்ஷையிலும், லண்டன் B. SC. பரீக்ஷையிலும் தேர்ச்சிபெற்றவர்; பிரமசரியநிலைமேற்கொண்டு, சென்னையிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ணமடத்துத் தொடர்புடைய துறவியாய் அம்மடத்துத் தலைவரிட்ட பிரபோதசைதந்யர் என்னும் நாமத்துடன் சென்னையிற் சில ஆண்டுகள் ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம் என்னும் தமிழ்ப்பத்திரிகையின் ஆசிரியராயிருந்து அதனைச் செவ்விதின் நடத்திவந்தவர்; பின் ஸ்ரீராமகிருஷ்ணமடத்ததிபர்கட்டளைமேற்கொண்டு இமயமலைச்சாரலில் அம்மடத்துத்தலைவர் இட்ட விபுலாநந்தர் என்னும் தீக்ஷாநாமத்தொடு வேதாந்த கேசரீ என்னும் ஆங்கிலப்பத்திரிகையின் ஆசிரியராயமர்ந்து அதனையும் தம் அரிய பெரிய கட்டுரைகளாற் சிறப்பித்துவந்தவர்; இழுமென்மொழியால் விழுமியபொருள் பயக்குங் கட்டுரை வரைவதிலும் சொற்பொழிவாற்றுவதிலும் கவிகளியற்றுவதிலும் வல்லுநர்; இருபதாண்டுகளாக முத்தமிழும்பற்றிய எத்துணையோபல பொருளுரைகளாற் செந்தமிழை வளப்படுத்தியவர்; அண்ணாமலை பல்கலைக்கழகத்தும் இலங்கைப் பல்கலைக்கழகத்தும் தமிழ்த்துறைத்தலைவராயிருந்து பற்பல ஆண்டுகள் பெருந்தமிழ்த்தொண்டாற்றியவர்; பொருட்பற்றின்றித் தம் வருவாயிற் பெரும்பகுதியை ஸ்ரீராமகிருஷ்ண மடத்துக்கு உதவிவந்தவர்; தம் வாழ்நாள் முழுதும் துறவுநிலையினின்று பிறழாத தூயர்.

இவ்வாறு தமிழ்ப்பணியொன்றினையே குறிக்கோளாக்கொண்டொழுகிய செம்மனச்செல்வராகிய அடிகள் இமயமலைச்சாரலில் வசித்தகாலத்து அவர்களைப்பற்றிய நோயானது நீங்காதுநின்று நிகழும் ஸர்வஜித்து ஆடிமீ 3உ அடிகளை நம்மைவிட்டுப் பிரித்துவிட்டது. இவர்மறைவு தமிழுலகுக்குப் பெருநட்டமாகும். மதுரைத்தமிழ்ச்சங்கம் இவர்பிரிவால் பெரிதும் அவலிக்கின்றது. செந்தமிழ் இவ்வாடிமதியில் தன் அரும்பெறலாசிரியரையும், தனக்குச்சிறந்த பொருளுரைகளை வழங்கிவந்த புலவர்பெருமானான அடிகளையும் இழந்து வருந்துகின்றது. அடிகள் மறைவால் வருந்தும் அனைவர்க்கும் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அடிகள் நம்மைப் பிரிந்துசென்றாலும் அவர் செந்தமிழில் எழுதி வெளியிட்ட கட்டுரைகளும் மதங்கசூளாமணி யென்னும் நூலும், கரந்தைத்தமிழ்ச் சங்கத்துத் தமிழ்ப்பொழில்வாயிலாக வெளியிட்ட யாழ்நூலும் அவருடைய ஞாபகச்சின்னங்களாக என்றும் நீங்காதுநின்று தமிழ்வளர்ச்சிக்குதவிவரும்.

அடிகளான்மா இறைவனடியிணைநீழலிற் கலந்து இன்புறுக.

பத்திராசிரியர்.

சுவாமி விபுலானந்தர் மறைவு

சிறந்த தமிழ்ப்பேராசிரியரும், ஆங்கிலம்முதலிய பலமொழிகளிலும் மிகத் திறமைபடைத்தவரும் ஆகிய சுவாமி விபுலாநந்தரவர்கள் அணிமையில் பூதவுடல்நீத்தமை அறிந்து மிக்க வருத்தம் அடைகின்றேன். இவர்கள் தவவொழுக்கமும் அன்பு அருள் முதலிய உயர்குணங்களும் படைத்தவர்கள்; ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆராய்ச்சியறிவும் பேச்சுவன்மையும் வாய்க்கப்பெற்றவர்கள்; என்றும் சாந்தநிலையிற் பிறழாதவர்கள்; பல ஆண்டுகளுக்குமுன் மதுரைத்தமிழ்ச்சங்கத்தில், நாடகக்கலையைப்பற்றிச் சுவாமிகள் அரிய சொற்பொழிவு ஆற்றியபொழுது யான் கண்டு இன்புற்றேன். அந்நாள்தொட்டு அன்புநிலை சிறிதும் வேறுபாடின்றி வளர்ந்துவந்தது. அச்சொற்பொழிவின்பயனாக 'மதங்கசூளாமணி' என்னும் நூல் தமிழ்ச்சங்கத்தின்மூலம் வெளிவந்தது. பின்னர், அண்ணாமலைபல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராக இருந்தபொழுது தமிழிசைநூல்களை ஆராய்ந்து சிறந்தமுறையில் 'யாழ்நூல்' ஒன்று எழுதத்தொடங்கி அணிமையில் நிறைவேற்றினார்கள். அந்நூல் 'கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின்' ஆதரவில், திருக்கொள்ளம்புதூர்ச் சிவாலயத்தில்வைத்து அரங்கேற்றப்பட்டசெய்தி தமிழ்நாடு நன்கு அறியும். இவ்வேலை முடிந்ததும், சுவாமிகள் பூதவுடல் மறைந்ததை நினையுங்கால், இதற்காகவே அவர்கள்தோற்றம் நேர்ந்ததோ எனக் கொள்ளத்தக்கதாகவுள்ளது. சுவாமிகளுக்குச் செய்யுளியற்றும் திறமையும், உரைநடையெழுதும்வன்மையும் நன்கு அமைந்திருந்தன. கோனூர் ஜமீன்தார். திரு. பெ. ராம. ராம. சிதம்பரம்செட்டியாரவர்கள் சுவாமிகள் உடல்நோயுற்றிருந்ததுகண்டு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவிப் பேணினார்கள். காலதத்துவம் வரையறைப்பட்ட அளவு முடிந்ததும் மிகப்பெரிய அறிவுக்களஞ்சியத்தையும் கவர்ந்துகொள்ளலாயிற்று. இந்நிகழ்ச்சி நம்மனோருள்ளத்தை வருத்தும் இயல்பினது. சுவாமிகள்

சித்தசாந்தியுடையவர்களாதலின் அவர்கள் குறிக்கோளுக்குப் பௌதிகவுடல் நீத்தது மாறுபாடன்றெனினும் அவர்கள் உடலொடுகூடி இன்னும் பல்லாண்டு இருப்பின் தமிழுலகம் பெரிதும் பயன் எய்துமே! அங்ஙனம் இல்லாமல் நேர்ந்தது பெருங்குறையே! என்செயலாம்! அடிகளைத் தமிழுலகுக்கு அளித்ததெய்வம், தமிழ் மக்கள் எதிர்பார்த்தபடி அவர்களை நெடிதுவையாமல் ஏற்றுக்கொண்டது பெரிதும் இரங்கத்தக்கதே. அடிகள் நல்லுயிர் இறையடி நீழலிலியைந்து அழிவிலின்பநுகர்ச்சியில் தலைப்பட்டு வாழ்வதாக.

மு. கதிரேசன்.

மதிப்புரை

பாரதசாரவெண்பா:—[இயற்றியவர்—அருட்டிரு. வீர. சோமசுந்தரசுவாமிகளின் மாணவர் திரு. S. பெருமாள்சுவாமிகள். விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் 'திரு. S. பெருமாள்சுவாமிகள் c/o திருவாளர் V. ஷண்முகசுந்தரம்பிள்ளையவர்கள், M.A., B.L. வழக்கறிஞர், திண்டுக்கல்ரோடு, மதுரை' என்ற விலாசத்திற் பெறலாம்.]

பாரதம் என்பது இதிகாசமிரண்டனுள் ஒன்று; கௌரவ-பாண்டவர் வரலாறு கூறுவது; மிக்க விரிவுடையது. இதனை வில்லிபுத்தூரார் முதலியோர் பல்லாயிரம் தமிழ்ப்பாடல்களால் இயற்றியுள்ளார்கள். அவை மிக்க காலச்செலவில் ஓரளவு தமிழ்ப்பயிற்சியுடையாரால்மட்டும் பயின்று பயன்கொள்ளத்தக்கனவாயுள்ளன. ஆதலின் அவற்றைப் பெரும்பாலும் தழுவிச் சுருங்கிய கால அளவில் யாவரும் பயின்று தெளிந்து பயனடையுமாறு அடியளவாற்சுருங்கிய வெண்பாயாப்பில் 750 பாடல்களிற் பாரதசாரவெண்பா என்னும் இந்நூலை இயற்றியுதவிய திருத்தகு பெருமாள்சுவாமிகளது நன்முயற்சியும், இந்நூற்பதிப்புக்கு வேண்டும் பொருளுதவிபுரிந்த வெண்ணுக்குடித் திரு. சீ. மருதப்பாதென்கொண்டாரவர்களது தமிழ்ப்பற்றும் பாராட்டத்தக்கன. இந்நூலுட்காணப்படும் பாடல்கள் பலவும் செஞ்சொல்லும் ஓசைநயமும் பொருட்டெளிவும் அமைந்தனவாயுள்ளன. அப்பாடல்களின் இயல்சிதையும்படி நேர்ந்த பிழைகள் மறுபதிப்பில் திருத்தமடையும் என்று நம்புகிறோம்.

II. சேந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணுநூல் (5) இனியநாற்பது (உரையுடன்)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ்	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (தமிழ்)	0	6	0
	ஷை (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	0	12	0

56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை...	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0
68.	திருமுருகாற்றுப்படை.	0	10	0

குறிப்பு:-ஸ்டாக்கிலில்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்" செந்தமிழ் "ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ. 4—8—0. இதுவரை 43 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாத தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. புத்தகவியாபாரிகள் வாங்கும் சங்கப்பிரசுரங்களுக்குச் சர்க்கார் உத்திரவுப்படி 100-க்கு 15 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணன், மானேஜர்.